UNIVERSITY LIBRARY
22 MAY 2013


# எழுகதிர்

ஐரோப்பிய பதிப்பு

ELUKATHIR

Rs20 | Euro0.50

வாரஇதழ் | இதழ்: 38 | 23.04.2013


## வடக்கில் முஸ்லிம்களுக்கு 1500 ஏக்கர் காணி!

வடக்கு முஸ்லிம் மக்களுக்கு அரசாங்கம் 1500 ஏக்கர் காணிகளை வழங்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1990ம் ஆண்டில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் விரட்டியடிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கே இவ்வாறு காணி வழங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மன்னார் மாவட்டத்தின் அரச காணிகளும் காட்டுப் பிரதேசங்களும் இவ்வாறு முஸ்லிம்களுக்கு வழங்கப்பட உள்ளன. வட மாகாணத்திற்கான ஜனாதிபதி செயலணியும், சுற்றாடல் அமைச்சும் கூட்டாக இணைந்து இந்த காணி வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளன.

எதிர்வரும் ஜூன் மாதமளவில் இந்த காணி வழங்கும் நடவடிக்கைகள் பூர்த்தியாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# செப்டம்பரில் வடக்கு தேர்தல்: ஜனாதிபதி மீண்டும் உறுதி!




எதிர்வரும் செப்டம்பர் மாதத்தில் வட மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

வெலிஓயாவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் காரணமாக கடந்த 30 ஆண்டுகளாக வடக்கு மக்கள் சொல்லொனா துயரங்களை அனுபவித்து வருகின்றனர். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விரைவில் தேர்தல் நடத்தப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், வடக் கில் தேர்தல் நடத்தப்படுவதற்கு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் சிலரும், ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கூட்டமைப்பின் வேட்பாளர் நீதியரசர் விக்கினேஸ்வரன்!?



வடக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில், முதலமைச்சர் வேட்பாளராக முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் நிறுத்தப்படவுள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கு மாகாணசபைத் தேர்தலில் முதல்வர் வேட்பாளராக நிறுத்துவது குறித்து, ஓய்வுபெற்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்பு கொண்டுள்ளதாகவும் அதற்கு அவர் இணங்கியுள்ளதாகவும் அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதனை உறுதிப்படு த்தவில்லை.

கொழும்பு சிறி கதிரேசன் மண்டபத்தில் வரும் 26ம் நாள் இடம்பெறவுள்ள தந்தை செல்வாவின் 36வது நினைவுக் கூட்டத்தில், நினைவுப் பேருரையாற்ற ஓய்வுபெற்ற நீதியரசர் சி.வி விக்னேஸ்வரனுக்கு தமிழரசுக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது. இதில் தமிழ்த் தேசியக்

(11ம் பக்கம் பார்க்க)


## வடக்கின் ரயில் பாதை: செப்டம்பரில் கிளிநொச்சி!

வடபகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் ரயில் பாதை புனரமைப்புப் பணியில் கிளிநொச்சி வரைக்குமான புனரமைப்பு எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துடன் முழுமையாக நிறைவடையுமென யாழ். இந்தியத் துணைத் தூதுவர் எஸ்.மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

காங்கேசன்துறை வரையான புனரமைப்புப் பணிகள் எதிர்வரும் 2014ம் ஆண்டின் இறுதிப் பகுதியிலேயே நிறைவடையுமெனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த மூன்று தசாப்தகால யுத்தம் காரணமாக வட பகுதிக்கான ரயில் பாதைகள் முற்று முழுதாக சேதமடைந்திருந்தன.இந்த நிலையில் இந்திய அரசின் நிதியுதவித் திட்டத்தின் கீழ் அந்நாட்டின் ஐகோன் நிறுவனம் வடபகுதிக்கான ரயில் பாதை புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

## ஆஸி.படகுப்பயண ஆபத்து: ஈழ அகதிகளுக்கு விளக்கம்!



அவுஸ்திரேலியாவிற்கான படகுப் பயணங்கள் தொடர்பில் இந்திய வாழ் இலங்கை அகதிகளுக்கு விளக்கமளி க்கப்பட்டுள்ளது. தமிழக முகாம்களில் தங்கியிருக்கும் இலங்கை இடம்பெயர் மக்களுக்கு இந்த விளக்கம் அளிக்கப்பட் டுள்ளது.

அவுஸ்திரேலியாவிற்கு படகு மூலம் விஜயம் செய்வதனால் ஏற்படக் கூடிய ஆபத்துக்கள் இதன் போது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. தமிழகத்தின் பல்வேறு மாநிலங்களில் அமைந்துள்ள முகாம்களில்

(11ம் பக்கம் பார்க்க)

# தமிழக அரசியல்வாதிகளுக்கு ஈழத்தமிழர் மீது அக்கறை இல்லை!

## றோ முன்னாள் அதிகாரி கண்டனம்!!

தமிழகத்தில் உள்ள சில அரசியல்வாதிகள் இலங்கைக்கு எதிராக பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருவது தமது சொந்த அரசியல் தந்திரத்திற்காக என இந்தியாவின் றோ புலனாய்வு பிரிவின் முன்னாள் விசாரணை ஆய்வாளர் ஜோதி சிங் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழ் மக்களின் உரிமைகளுக்கு ஆதரவு வழங்குவதாக கூறி, தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் ஒன்றுடன் ஒன்று போட்டி போட்டு செயற்படுவதாகவும், அவர்களுக்கு இலங்கை தமிழர்கள் மீது அவர்களுக்கு உண்மையான அக்கறை இருந்திருந்தால், போரின் இறுதிக்கட்டத்தில் அவ்வாறான போராட்டங்களை நடத்தியிருக்க முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2014 ஆம் நடைபெறவுள்ள இந்திய பொதுத் தேர்தலை இலக்கு வைத்தே தமிழக அரசியல் கட்சிகள் இலங்கைக்கு எதிரான இந்த பாரிய பிரசாரங்களை ஆரம்பித்துள்ளனர்.

சர்வதேச மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத்தில் இலங்கைக்கு எதிரான நிலைப்பாட்டை இந்தியா எடுத்தமை தொடர்பில் சிங்கள மக்கள் கொண்டுள்ள நிலைப்பாட்டை நிராகரிக்க முடியாது.

சிங்கள மக்களின் சிறு தரப்பினரை தவிர பெரும்பான்மையானவர்கள் இந்தியாவுடன்

(11ம் பக்கம் பார்க்க)

நட்புறவுடன் நாட்டைக் கட்டியெழுப்புவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வீதி அபிவிருத்தி

மன்னார் நகர சுற்றுவளைவிலிருந்து ஏ - 14 பிரதான வீதியை அகலப்படுத்துவதற்கான ஆரம்பக்கட்ட



வேலைத்திட்டத்தை தற்போது மேற்கொண்டுள்ளதாக டயஸ் போர லங்கா அமைப்பின் இயக்குநர் ஜெர்மி லியனுகே தெரிவித்தார்.

மன்னார் நகர சுற்றுவளைவிலிருந்து மன்னார் பொது விளையாட்டு மைதானம் வரையான ஏ - 14 பிரதான வீதியை அகலப்படுத்தவுள்ளதாகவும் மன்னார் நகரசபையும் டயஸ் போர லங்கா அமைப்பும் இணைந்து இந்த வேலைத்திட்டத்தை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஏ - 14 வீதி மிகவும் குறுகியதாக உள்ளதால் இவ்வீதியூடாக போக்குவரத்துக்களை மேற்கொள்வதில் சிரமம் காணப்படுவதுடன், இவ்வீதியில் விபத்துக்கள் ஏற்படுவதற்கான நிலைமையும் காணப்படுகின்றன.

இந்நிலையிலேயே இவ்வீதியை அகலப்படுத்துவதற்கான வேலைத்திட்டத்தை மேற்கொண்டுள்ளதாகவும் டயஸ் போர லங்கா அமைப்பின் இயக்குநர் ஜெர்மி லியனுகே தெரிவித்தார்.

## குளங்கள் புனரமைப்பு

மன்னார் நகரசபை பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள சிறிய குளங்களை புனரமைப்பது தொடர்பில் கலந்துரையாடியதாக மன்னார் நகரசபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தெரிவித்தார்.

மன்னார் நகரசபையில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

மன்னாரின் மறுமலர்ச்சி வேலைத்திட்டத்தின் கீழ், இக்குளங்களை புனரமைப்பது தொடர்பில் கலந்துரையாடியதாகவும் அவர் கூறினார்.

மன்னார் நகரசபையும் டயஸ்போர லங்கா அமைப்பும் இணைந்து மன்னார் நகரசபை பிரிவுக்குட்பட்ட 18 சிறிய குளங்களை புனரமைத்து மக்களின் பாவனைக்காக கையளிப்பது தொடர்பாக முக்கிய தீர்மானங்களை மேற்கொண்டதாகவும் அவர் கூறினார்.

முதற்கட்டமாக மன்னார் உப்புக்குளம் பிள்ளையார் கோயில்குளம், உப்புக்குளம் வட்டக்குளம், எழுத்தூர் தரவன் கோட்டைக்குளம், எழுத்தூர் கோரைக்குளம் ஆகிய 4 குளங்களும் புனரமைக்கப்படவுள்ளன.

இக்கலந்துரையாடலில் மன்னார் நகரசபையின் உபதலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ், நகரசபை உறுப்பினர் இரட்னசிங்கம் குமரேஸ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## கடனுதவி

யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் வவுனியா மாவட்டத்தில் அடிப்படை வசதிகளற்ற பயனாளிகளுக்கு 208.1 மில்லியன் ரூபா வாழ்வாதாரக் கடன் உதவியாக வழங்கப்பட்டுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வவுனியா மாவட்ட மீள்எழுச்சித் திட்டத்தின் சமூக ஒருங்கிணைப்பாளர் எஸ்.சந்திரகுமார் தெரிவித்தார்.

மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கான வேலைத்திட்டம் தொடர்பில் அவரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இடம்பெயர்ந்து மீள்குடியேறிய மற்றும் வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள பயனாளிகள் 8,164 பேருக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள்எழுச்சித் திட்டத்தின் ஊடாக இந்தக் கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் 98 கிராமங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் நன்னீர் மீன்வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, ஆடை தைத்தல், விவசாயம், காளான் வளர்ப்பு, பன்றி வளர்ப்பு, கோழிவளர்ப்பு உட்பட பல தொழில் முயற்சிகளுக்காகவே இந்தக் கடன் உதவி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## மின் விளக்கு வசதி

காத்தான்குடி நகர சபை பிரிவிலுள்ள பல வீதிகளுக்கு தெரு மின்விளக்குகள் பொருத்தும் நடவடிக்கை கடந்த வாரம்



முன்னெடுக்கப்பட்டது.

புதிய காத்தான்குடி டெலி கொம் வீதி, புதிய காத்தான்குடி பதுறியா ஜும் ஆ பள்ளிவாயல் வீதிகளுக்கே தெரு மின்விளக்குகள் இவ்வாறு பொருத்தப்பட்டுள்ளன.

இவ்வீதிகளில் நீண்டகாலமாக மின்விளக்குகள் ஒளிரமால் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், காத்தான்குடி நகர சபையின் பதில் தவிசாளர் எம்.ஐ.எம்.ஜெஸீம், காத்தான்குடி நகரசபை உறுப்பினர்களான எச்.எம்.எம்.பாக்கீர் மற்றும் எம்.அலிசப்ரி, எம்.எஸ்.சியாத் ஆகியோரின் முயற்சியினால் இம் மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

புதிய காத்தான்குடியிலுள்ள பல பகுதிகளில் இவ்வாறான தெரு மின் விளக்குகளை பொருத்த திட்டமிட்டுள்ளதாக பதில் தவிசாளர் எம்.ஐ.எம்.ஜெஸீம் தெரிவித்தார்.

## கட்டிட நிதியுதவி

கிண்ணியா மத்திய கல்லூரிக்கு சுமார் 14 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் தெரிவித்தார்.

நிர்வாக கட்டிடமொன்றை நிர்மாணிக்கப்பதற்காகவே கிண்ணியா மத்திய கல்லூரிக்கு இந்த நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

இந்த நிதி எனது வேண்டுகோளிற்கிணங்க கல்வி அமைச்சினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

கட்டிட நிர்மாணத்திற்கு முதற் கட்டமாகவே இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த கட்டிடம் அமையப் பெறுவதன் மூலம் கல்லூரியின் நீண்ட கால தேவையொன்று நிவர்த்தி செய்யப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் தௌபீக் மேலும் தெரிவித்தார்.

## உபகரணங்கள் வழங்கல்

தேசிய மீனவ ஒத்துழைப்பு பேரவையினூடாக இவ்வாண்டு, பெண்களை தலைமையாக கொண்ட 250 குடும்பங்களின்; வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்காக சுயதொழில் உபகரணங்களை வழங்குவதற்கு எண்ணியுள்ளோம்' என அதன் இணைப்பாளர் சுனேஸ் சோசை தெரிவித்தார்.

'தேசிய மீனவ ஒத்துழைப்பு பேரவையானது மக்களின் அடிப்படை உரிமைகளை முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் உருவாக்கப்பட்ட சுயாதீனமான ஒரு அமைப்பு. இவ் அமைப்பானது மன்னார் மாவட்டத்திலுள்ள பல்வேறுபட்ட மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுகொடுக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது' என்றும் அவர் தெரிவித்தார்.

தேசிய மீனவ ஒத்துழைப்பு பேரவையின் அங்குரார்ப்பணக் குழுக் கூட்டம்; கடந்த வாரம் வியாழக்கிழமை மன்னார் மாவட்ட மீனவ சங்கங்களின் சமாச கட்டிடத்தில் மன்னார் மாவட்ட தேசிய மீனவ ஒத்துழைப்பு பேரவையின் இணைப்பாளர் சுனேஸ் சோசை தலைமையில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுகதிர்
Elukathir Weekly
Kandy Road, Karaddypokku, Kilinochchi
elukathirnews@gmail.com
முகநூல்: Elukathirthagaval

## நமது நோக்கு

# தமிழக மீனவர் பிரச்னை: தவறவிடப்பட்ட சந்தர்ப்பம்!

இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தது. ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய அந்தக்குழுவினர் இலங்கையில் தங்கியிருந்தபோது பல்வேறு தரப்பினரையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியிருந்ததுடன், இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து தமது கவனத்தை செலுத்தியிருந்தனர்.

இந்தப் பாராளுமன்ற உறுப்பினர்களின் விஜயத்திற்கு ஏற்பாடுகளைச் செய்தவர்கள் இந்தியாவின் வர்த்தக சமூகத்தினர் என்பது கவனிக்கத்தக்கது. ஜெனீவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா கடந்த ஆண்டு ஆதரித்ததைத் தொடர்ந்தே இரு தரப்பு உறவிலும் கீறல்விழுந்துவிட்டது என்பது ஒன்றும் இரகசியமானதல்ல. இது பாரிய பாதிப்பை ஏற்படுத்தியது இரு தரப்பிலும் உள்ள வர்த்தக சமூகத்தினருக்குத்தான். அவர்கள் இந்த கீறலுக்கு ஒத்தணம் போட விரும்புகின்றார்கள். அதற்காகவே இந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் விஜயம் என்பது சில விமர்சகர்களின் கருத்து.

இந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது விஜயத்தின்போது யாழ்ப்பாணத்திற்கும் விஜயம் செய்திருந்தனர். இந்த விஜயத்தின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களையும் சிவில் சமூக பிரதிநிதிகளையும் சந்தித்திருந்தனர். சிவில் சமூகத்தினர் என்ற பெயரில் இவர்களைச் சந்தித்தவர்கள் எந்த அடிப்படையில் அந்தச் சந்திப்பிற்கு அழைக்கப்பட்டிருந்தனர் என்பது தெரியவில்லை. மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் மன்னாரிலிருந்து அழைக்கப்பட்டிருந்தது எதற்காக என்று தெரியவில்லை. யாழ்ப்பாண ஆயர் சிவில் சமூகப்பிரதிநிதி இல்லையா என்பது கூட தெரியவில்லை. இவையெல்லாவற்றிற்கும் மேலாக அங்கு சமூகமளித்திருந்தவர்கள் எல்லோரும் என்ன பேசினார்கள் என்பது முழுமையாக வெளியே வரவில்லையானாலும், அங்கு கருத்துத் தெரிவித்த யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வாழ்நாள் போராசிரியர் ஒருவர், யாழ்ப்பாணத்தில் சிங்களத்தின் ஆதிக்கம் அதிகரித்து வருவதாகவும் தமிழில் பேசுவது கூட முடியாத காரியமாக இருப்பதாகவும் கருத்துத் தெரிவித்திருப்பதாக தெரிய வருகின்றது. யுத்தம் உச்சக்கட்டத்தில் நடந்துகொண்டிருந்தபோது புலம் பெயர் நாடுஒன்றில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் புலிகள் வளையம் அமைக்கிறார்கள் படையினரை சுற்றிவளைக்கப்போகின்றார்கள் என்று கதையளந்து கைதட்டுப் பெற்றவர் அவர். இப்படிக் கூறுவதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லைத்தான்.

அந்தச் சந்திப்பில் நடைபெற்ற இன்னுமொரு சுவாரஸ்யம், நமது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் பதில். இந்தியாவிலிருந்து வந்திருந்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், நமது மீனவர்களுக்கும் தமிழக மீனவர்களுக்கும் இடையே நடைபெற்றுக்கொண்டிருக்கும் யுத்தம் தொடர்பாக வினவியிருக்கிறார். தமிழக மீனவர்களால் இங்குள்ள மீனவர்களுக்கு என்ன பிரச்னை என்று அவர் கேட்க, அதற்கு முண்டியடித்துக்கொண்டு பதில் கூறியிருக்கிறார் நமது பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்கள். தமிழக மீனவர்களால் இங்கு ஒரு பிரச்னையும் இல்லை. தென் பகுதியிலிருந்து வரும் சிங்கள மீனவர்களால்தான் எமக்குப்பிரச்னை என்று பதிலளித்திருக்கிறார் அவர். இந்தக் கருத்தை அங்கு சந்திப்பில் கலந்து கொண்ட சட்டத்தரணி ரெமீடியஸ் கண்டித்திருக்கலாம். அல்லது மறுத்திரு க்கலாம். மீனவர்களின் பிரச்னைகளை நன்கு அறிந்தவர் அவர்.

தமிழக மீனவர்களின் அத்துமீறலாலும் அவர்கள் பாரிய றோலர் படகுகளில் பருத்தித்துறை வரை வந்து நமது மீன்வளங்களை கொள்ளையடிப்பது தொடர்பாகவும் நமது தமிழ்த் தலைமைகள் இதுவரை வாய்திறக்கவில்லை.அதற்கு காராணம் அவர்களின் பலரது குடும்பங்கள் தமிழகத்தில்தான் இப்போதும் இருக்கின்றன. பல பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழக மருத்துவக் கல்லூரிகளில் தமது பிள்ளைகளுக்கு அனுமதியைப் பெற்றுக்கொண்டுள்ளனர். இந்நிலையில் தமிழக மீனவர்கள் என்னதான் அடாவடித்தனம் செய்தாலும், அதற்கு எதிராக இவர்கள் குரல் கொடுக்கப் போவதில்லை. இல்லையேல், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் மீன்பிடித்துறை அமைச்சராக இருந்தபோது இந்த அமைச்சின் ஆலோசகராக அமைச்சரால் நியமிக்கப்பட்டிருந்த சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கு நமது மீனவர்களின் கஷ்டம் தெரியாததல்ல. நமது மீனவர்களின் பிரச்னையை இந்திய மத்திய அரசுக்கு விளக்கமாக விபரிப்பதற்கு கிடைத்த மற்றுமொரு சந்தர்ப்பத்தையும் நமது தலைமைகள் தவறவிட்டிருக்கின்றன. இது ஒன்றும் ஆச்சரியத்திற்குரியதல்ல. ஆனால் அவர்கள் இன்னமும் மாறி விடவில்லை என்பதை இந்தச் சம்பவங்கள் உணர்த்தியிருக்கிறது.

# வடக்கில் அரசின்; தேர்தல் பிரசாரம் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை!

### ஊடகத்துறை அமைச்சர் கூறுகிறார்!!

வடக்கில் அரசாங்கத்தின் தேர்தல் பிரசாரம் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. தேர்தல் இடம்பெறும் காலம் குறித்து உரிய நேரத்தில் அறிவிக்கப்படும் என ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

ஊடகத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் இன்னும் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவில்லை. உதயன் பத்திரிகை தாக்கப்பட்டது அரசாங்கத்தின் செயற்பாடல்ல. அவ்வாறான தாக்குதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் அது தேர்தல் பிரசாரங்கள் என்று அர்த்தமா என நகைச்சுவையாகவும் கேட்டார்.

வடமாகாண சபைத் தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறுமென ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தேர்தல் இடம்பெறும் காலம் குறித்து உரிய நேரத்தில் மக்களுக்கு அறிவிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# நிபந்தனை அடிப்படையில் இந்திய உதவிகள் இல்லை!

நிபந்தனை அடிப்படையில் இலங்கைக்கு உதவிகள் வழங்கப்பட மாட்டாது என இந்தியா அறிவித்துள்ளது.

இலங்கை, மாலைதீவு, ஆப்கானிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கு நிபந்தனை அடிப்படையில் உதவிகள் வழங்கப்படமாட்டாது என இந்தியா தெரிவித துள்ளது.

இருதரப்பு புரிந்துணர்வு அடிப்படையிலேயே இவ்வாறான உதவிகள் வழங்கப்பட்டு வருவதாக இந்திய வெளிவிவகாரச் செயலாளர் ரஞ்சன் மாத்தாய் குறிப்பிட்டுள்ளார்.

நாடுகளின் சுயாதீனத்தன்மைக்கு குந்தகம் ஏற்படும் வகையில் நிபந்தனைகள் விதிக்கப்பட மாட்டாது என அவர் தெரிவித்துள்ளார்.

இரு தரப்பு நன்மைகளை முதனிலையாகக் கொண்டே இந்த நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.கல்வி உள்ளிட்ட பல்வேறு வழிகளில் உதவிகள் வழங்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

# வெளிநாட்டு ஊழிய வளத்தை பயன்படுத்த ஜனாதிபதி யோசனை!



வெளிநாட்டு ஊழிய வளத்தை பயன்படுத்திக் கொள்வதில் தவறில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்கு தேவையான பயிற்றப் பட்ட நிபுணத்துவம் வாய்ந்த ஆளணி வளம் இல்லா விட்டால் வெளிநாட்டு ஊழிய வளத்தை பெற்றுக் கொள்ள வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலைமையை கட்டுப்படுத்த அதிகளவான ஊழியர்களுக்கு விசேட பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# கடற்படையுடன் இணைந்து இந்தியக்கடற்படை பயிற்சி!

சிறிலங்கா கடற்படையினருடன் இணைந்து பயிற்சிகளை மேற்கொள்வதற்காக, இந்தியக் கடற்படை மற்றும் கடலோரக் காவல்படைக் கப்பல்கள் மூன்று சிறிலங்காவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளன.

இந்தியக் கடற்படையின் 'ஐஎன்எஸ் சுஜாதா' என்ற போர்க்கப்பலும், 'ஐஎன்எஸ் தரங்கினி' என்ற பாய்மரப் பயணப் பயிற்சிக் கப்பலும், இந்தியக் கடலோரக் காவல்படையின் 'வருண' என்ற ரோந்துக் கப்பலுமே கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.

இந்தக் கப்பல்களுக்கு கொழும்புத் துறைமுகத்தில் சிறிலங்கா கடற்படையினர் வரவேற்பு அளித்துள்ளனர். வரும்21ம் திகதி வரை கொழும்புத் துறைமுகத்தில் தரிந்து நிற்கவுள்ள இந்தியக்கப்பல்கள், சிறிலங்கா கடற்படையினருடன் இணைந்து சிறப்புப் பயிற்சித் திட்டங்களில் பங்கேற்கவுள்ளன.

இந்தியக் கடற்படையின் ஆழ்கடல் ரோந்துக் கப்பலான, 'ஐஎன்எஸ் சுஜாதா', 101 மீற்றர் நீளம் கொண்டது. இதில் 192 கடற்படையினர் பணியாற்றுகின்றனர்.

'ஐஎன்எஸ் தரங்கினி' என்ற 54 மீற்றர் நீளம் கொண்ட பாய்மரப் பயணப் பயிற்சிக் கப்பலில் 80 இந்தியக் கடற்படையினர் பணிபுரிகின்றனர்.

இந்தியக் கடலோரக் காவல்படையின் 'வருண' என்ற ஆழ்கடல் ரோந்துக் கப்பலில் 187 கடலோரக்காவல் படையினர் பணியாற்றுகின்றனர். இதன் நீளம் மீற்றர்களாகும்.

சுஜாதா மற்றும் வருண ஆகிய கப்பல்களில் தலா ஒரு 'செரெக்' உலங்கு வானூர்திகளும் இருப்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ENGLISH

# TNA in a twist makes wrong call

The government last week condemned the moves of the Tamil National Alliance (TNA) calling on India to press Sri Lanka for an interim administration in a merged North and Eastern provinces. And, reiterated that such mechanisms should be discussed with the regime and not outside entities.
The TNA recently urged India to press the government to establish an interim administration in the North and East that should be monitored by India or the UN.
The call was made when the TNA flanked by Bishop of Mannar Most Rev. Rayappu Joseph met a visiting delegation from India in Jaffna on April 9.
Speaking to The Nation, United People's Freedom Alliance (UPFA) General Secretary and Minister of Environment Susil Premajayantha said the TNA should discuss matters with the government of Sri Lanka and that it was useless speaking to an Indian delegation. He added that following the provincial elections, matters in Jaffna will be settled. Further Minister Susil Premajayantha added that, we are a separate country, and Conventions prevent foreign parties from intervening in a nation's internal matters.
JVP Propaganda Secretary Vijitha Herath speaking on the issue said he doesn't see an independent administration as a solution and opposed TNA's move for international intervention. "It is the half-military system of the North-East that must be vanquished, giving way to a full democracy, where no human rights are being violated," he said.
While blaming the government for the current situation in the war affected areas, he said it was completely wrong of foreign parties to interfere, adding "It is the Sri Lankan government's responsibility to take care of the administration of the country"
TNA Jaffna District MP, Suresh Premachandran said the intention of the call for an interim administration was to prevent the government from involving in acts that deprived Tamil people of their basic rights. He also said the government was involved in practices like land grabbing and colonization and added that many people were yet to be resettled in their own lands. "Some are still in temporary shelters four years after the war," Premachandran said.
.(Courtesy: http://www.nation.lk)

# Daya Master May Contest Polls

Former LTTE media coordinator Daya Master may contest the elections in the north in September.



When contacted by The Sunday Leader, he refused to confirm or deny such a move but said he will respond within the course of the week. If he does contest, he will become the third most prominent former rebel to enter politics in Sri Lanka.
Earlier former LTTE Eastern Commander Karuna Amman entered parliament through the ruling party while former LTTE member Sivanesathurai Chandrakanthan alias Pillayan also contested polls in the East and was a Chief Minister in the area.
Soon after the peace process during the UNP regime Daya Master coordinated media visits to Kilinochchi and at times acted as a spokesman for the LTTE.
Daya Master had fled from LTTE controlled areas during the final stages of the war and surrendered to the army.
At present he is employed at a Tamil Television station operating in Jaffna.
(courtesy: http://www.thesundayleader.lk)

## DEUTSCH

# Sri Lanka zielt auf ein Einkommen von 4.000 US Dollar pro Kopf gegen 2016

Sri Lanka, welches in den letzten Jahren ein moderates positives Wachstum in der heimatlichen Wirtschaft erfahren hat, und das sogar, als die globale Ökonomie die schlimmste ökonomische und finanzielle Krise erfuhr, zielt darauf, sein pro Kopf Einkommen mit Vorsicht auf 4.000 US Dollar gegen 2016 zu steigern.
Das Land will einen kontinuierlichen Fortschritt auf 4000 UD Dollar pro Kopf bei dem Einkommen und eine Ökonomie von 100 Billionen US Dollar in den nächsten drei Jahren erreichen. Dies sagte der Gouverneur der Zentralbank in seiner Präsentation des Jahresberichtes der Bank für 2012.
Aber die Regierung warnte, dass das Land nicht in die Falle des "Mittleren Einkommens" fallen dürfte, auf seinem Weg zu dem Ziel der Höhe des Pro-Kopf-Einkommens.
.Er erklärte dies weiter und sagte, dass einige Volkswirtschaften eine Phase der Stagnation des Wachstums erfahrenwürden, nachdem sie 4000 US Dollar pro Kopf als Einkommen erreicht haben, wenn sie sich der Unfähigkeit gegenüber sehen, ihre Exporte zu steigert, um gegen niedriges Einkommen und niedrige Lohn-Ökonomien zu kämpfen, und auch gegen sehr erfahrene und innovative fortgeschrittene Ökonomien.
Wenn die Löhne mit der niedrigen Rate der Beschäftigungslosigkeit steigen, dann werden die Hersteller, welche hinter fortgeschrittenen Ökonomien hinterherhinken, unfähig sein, bei den Exportmärkten mit den Produzenten mit niedrigeren Kosten in Konkurrenz zu treten. Dies wird zu einem Rückgang bei dem ökonomischen Wachstum und, wie er erklärte, zur Stagnation führen.
Der Gouverneur bemerkte, dass in einigen Ländern das höhere Pro-Kopf-Einkommen als Barriere gewirkt hätte. Er bemerkte auch, dass ein Ausbruch aus einem möglichen ökonomischen Stillstand möglich ist, wenn das Land gewisse sehr wichtige Schritte unternimmt und auch das zentrale Konzept, welches in Mahinda Chintana eingeführt wurde, zusätzlich zum Tourismus. Das wäre ein Schlüssel, um die Falle des mittleren Einkommens in Sri Lanka zu vermeiden.
Unter der Politik der Mahinda Chintana Zukunftsvision werden die fünf wichtigsten Punkte – das Maritime, die Luftfahrt, die Energie, der Handel und das Wissen – zusammen mit dem Tourismus entwickelt. Dies betonte der Gouverneur.
Da die Bühne bereit ist für einen Schwung des höheren Wachstums in den nächsten paar Jahren, zielt Sri lanka auf einen ehrgeizigen mittelfristigen makroökonomischen Rahmen, wie der Gouverneur der Zentralbank in seiner Präsentation sagte.
Sri Lanka wird weiterhin die starke ökonomische Aktivität stärken, während es die Falle des Mittleren Einkommens vermeidet, und es wird die makroökonomische Stabilität stärken, zusammen mit andauernden Investitionen und einem Wachstum im Realsektor.
Er bemerkte, dass das anhaltende Vertrauen der Investoren die proaktiven politischen Maßnahmen unterstützen würde und auch die verbesserte Produktivität, und dass eine andauernde Entwicklung der Infrastruktur helfen würde, die Kapazität zu steigern, so dass Sri Lanka ein hohes ökonomisches Wachstum beibehalten könnte.
Mit freundlicher Unterstützung von : http://www.priu.gov.lk/)

## DUTCH

# Sri Lanka mikt op een $ 4.000 inkomen per hoofd van de bevolking in 2016

Sri Lanka, dat een gematigde positieve groei van de economie meemaakte in de afgelopen jaren, zelfs terwijl de wereldeconomie in de hevigste economische en financiële crisis verkeerde, mikt op een inkomensstijging per hoofd van de bevolking tot aan gemiddeld $ 4.000 in 2016.
Het land heeft een duurzame voortgang in het vizier richting $ 4.000 per hoofd van de bevolking en ziet een $ 100 miljard economie in het verschiet van de volgende 3 jaar liggen. Zo zei de president van de centrale bank tijdens zijn presentatie van het jaarlijkse rapport over 2012.
Echter, de president van de centrale bank waarschuwde dat Sri Lanka niet in de 'midden inkomens val' moet trappen op weg naar het bereiken van dit doel van een hoger inkomen per hoofd van de bevolking. In een nadere toelichting zei hij dat sommige economiën een fase van stagnerende groei doormaken nadat het punt van $ 4.000 is bereikt, vanwege het onvermogen om de export te versterken, in competitie met lage lonen landen en ook met innovatieve en geavanceerde economiën met hoog opgeleide werkers.
Als de lonen stijgen in combinatie met een laag werkloosheidscijfer zullen fabrikanten en producenten, die achterlopen bij de geavanceerde economiën, niet in staat zijn te concurreren in exportmarkten met lage productiekosten producenten, wat zal leiden tot afremming van de economische groei en stagnatie, zo verklaarde hij.
Opmerkend dat het bereikte hoge inkomen per hoofd van de bevolking in sommige landen resulteerde in een blokkade, wees de president van de centrale bank er op dat, om een mogelijke economische teloorgang te voorkomen, het land een paar belangrijke stappen moet zetten. Die vormen de 5 aandachtsvelden actieplan dat werd geïntroduceerd door Mahinda Chintana, inclusief het aandachtsveld toerisme en dat plan behelst de sleutel tot het voorkomen van de 'midden inkomen val in Sri Lanka.
Onder dit Mahinda Chintana toekomstvisie beleid worden 5 sleutelgebieden die aandacht dienen te krijgen -maritieme bedrijvigheid, luchtvaart bedrijvigheid, de energie sector, de commerciële sector en de kennis sector, verder ontwikkeld samen met de toeristische sector, zo bendrukte de bankpresident. Met het in de startblokken staan om een traject van grote groei te belopen in de volgende jaren mikt Sri Lanka op een ambitieus midden lange termijn plankader, zo zei de president van centrale bank tijdens de presentatie.
Sri Lanka zal de prestatie van sterke economische groei volhouden, daarbij de 'midden inkomen val' vermijdend en de macro-economische stabiliteit versterkend, gekoppeld aan een duurzaam investeringsniveau en de feitelijk groei van sectoren. Een duurzaam vertrouwen van investeerders dat wordt ondersteund door een pro-actieve benadering en verbeterde productiviteit, met doorlopende ontwikkeling van de infrastructuur, zal tevens helpen om Sri Lanka een grote en houdbare economische groei te geven, zo merkte hij op.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைகள்: ஒரு வரலாற்றுப் பார்வை

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மணலாறு பகுதிக்கு கடந்த சனியன்று விஜயம் செய்த ஜனாதிபதி " வடபகுதி மக்களுக்கும் மாகாணசபை தேர்தல் மூலம் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றே நாங்கள் விரும்புகின்றோம். வரும் செப்டம்பர் மாதத்தில் இந்தத் தேர்தலை நடத்தலாம் என்பதே எனது எதிர்பாரப்பாகும்."என்று தெரிவித்துள்ளார். அந்த வகையில் வடமாகாண சபைக்கான தேர்தல் மிக விரைவில் நடத்தப்படும் என உறுதியாகி உள்ளது.இந்த தேர்தலின் முக்கியத்துவம் பற்றி அறிந்து கொள்ள இந்த மாகாண சபைகளின் உருவாக்க காலமான 1980களுக்கு நாம் பின்னோக்கி பயணிக்க வேண்டும்.

தமிழீழ விடுதலைக்கான ஆயுதம் தாங்கிய இயக்கங்களின் போராட்டங்கள் 1983ம் ஆண்டிலிருந்து வேகம் பெற்றன. இந்திய அரசின் மத்தியஸ்தத்தை ஏற்று 1985ல் இலங்கை அரசு முதன் முறையாக போராட்ட குழுக்களுடன் பேச்சி வார்த்தையை மேற்கொள்ள முன்வந்தது. இந்த பேச்சு வார்த்தையில் முக்கிய இயக்கங்களாக திகழ்ந்த ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட், டெலோ ஈரோஸ்,எல்.ரி.ரி.ஈ மற்றும் த.வி.கூட்டணி போன்றவை கலந்து கொண்டன. எனினும் பூட்டானின் தலைநகரான திம்புவில் இடம் பெற்ற இப்பேச்சு வார்த்தையானது தோல்வியிலேயே முடிவடைந்தது. அதன் பின்னர் இந்தியா மேற்கொண்ட கடும் முயற்சியின்



பயனாக இலங்கை இந்திய ஒப்பந்தம் 1987ல் இடம்பெற்றது. அதன் அடிப்படையில் இலங்கை தமிழரின் அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்யும் வண்ணம் மாகாண சபைகளின் ஊடாக அதிகாரங்களை பரவலாக்குவது என்னும் உடன்பாட்டுக்கு இலங்கை அரசு முன்வந்தது. அதன் அடிப்படையில் எல்லாவித ஆயுதம் தாங்கிய இயக்கங்களும் ஆயுதங்களை இலங்கையில் பிரசன்னமாய் இருந்த இந்திய அமைதி படையினரிடம் ஒப்படைத்தனர்.1988ம் ஆண்டு இடம்பெற்ற தேர்தல் ஊடாக தற்காலிகமாக வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட்ட மாகாணசபை உருவாக்கப்பட்டது.இந்த தேர்தலில் புலிகள் பங்கெடுக்காமல் மீண்டும் ஆயுதங்களை கையில் எடுத்தனர்.எனினும் ஈ.பி.ஆர்.எல்.எப் தலைமையில் டெலோவும் இணைந்து வடகிழக்கு மாகாண சபையை வென்றனர். வடகிழக்கு மாகாணத்தின் முதலாவது முதலமைச்சராக அ.வரதராஜபெருமாள் பதவியேற்றார்.

இந்த நிலையில் மாகாணசபை தேர்தலில் பங்கெடுக்காது மீண்டும் ஆயுதங்களை கையில் எடுத்த புலிகள் இலங்கை அரசின் புதிய ஜனாதிபதியாக பொறுப்பெடுத்த பிரேமதாசாவின் சதி வலையில் வீழ்ந்தனர். தமிழ் மக்களுக்கு காவலாக வந்து



அமைதியை ஏற்படுத்த முயன்ற இந்திய படைகளுடன் புலிகளை மோதவிடுவதில் பிரேமதாசா வெற்றி பெற்றார்.அதனுடாக இந்திய படைகள் நாட்டை விட்டு வெளியேறவும் வடகிழக்கு மாகாணசபை சுமார் ஒரு வருட கால அற்ப ஆயுளுடன் இலங்கை அரசால் கலைக்கப்படவும் நேர்ந்தது. ஆனாலும் இலங்கை தமிழர்களின் போராட்டத்தின் பயனாக உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமையானது வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களிலும் அமுல்படுத்தப்பட்டது. வடக்கு கிழக்கில் புலிகள் மீண்டும் யுத்தத்தை கட்டவிழ்த்து விட்டனர்.

வடகிழக்கு மாகாண சபை 1990ம் ஆண்டு கைவிடப்பட்டதிலிருந்து வட- கிழக்கு மக்கள் புலிகளால் தமிழீழ கனவு நோக்கி பலியிடப்படுவது சுமார் 18 வருடகாலம்

**மட்டுநகரிலிருந்து எழுகதிரோன்**

நீடித்தது.

சுமார் இரண்டு தசாப்த காலம் கொடிய யுத்த சூழலுக்குள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட மக்களுக்கு புலிகளுக்குள் ஏற்பட்ட கிழக்கு பிளவே ஒரு முடிவை கொடுத்தது எனலாம். கிழக்கு புலிகளுக்கும் வன்னி புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட யுத்தம் கிழக்கு மாகாணத்திலிருந்து வன்னி புலிகளை முற்றாக தோற்கடித்தது.அந்த வேளையில் கிழக்கு புலிகள் தாம் ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் பங்கெடுக்க முன்வந்தனர்.கிழக்கு புலிகளிடமிருந்து தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் எனும் புதிய கட்சி தோற்றம் பெற்று கிழக்கு மாகாண சபையை ஏற்றுகொள்ள முன் வந்தனர்.அந்தமுடிவினை ஏற்று கொள்ள முடியாது என்றும் இது வரை காலமான எத்தனையோ இழப்புகளுக்கு பின்னர் வெறும் மாகாணசபையை மட்டும் ஏற்று கொள்வதா? என்றும் தமிழ் தேசிய



கூட்டமைப்பினர் கேள்வி எழுப்பினர்.அது மட்டுமன்றி பிரிக்கப்பட்ட வட கிழக்கில் தாம் போட்டியிட மாட்டோம். அதுவும் அதிகாரம் குறைந்த மாகாணசபையை ஏற்று கொள்ளுவது பச்சை துரோகம் என்று தமிழ் ஊடகங்களும் தமிழ் தேசிய கூட்டமைப்பினருக்கு ஏற்றவாறு கருத்துக்களை வெளியிட்டன. இது போன்ற எல்லா விதமான பாரிய எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் கடுமையான சவால்களுக்கு மத்தியிலுமே தனித்த கிழக்கு மாகாண சபை உருவாக்கப்பட்டது. 2008ம் இடம்பெற்ற தேர்தலில் சிறிலங்கா சுதந்திர கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் இணைந்து தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கிழக்கு மாகாண சபையை கைப்பற்றினர்.அதன் அடிப்படையில் கிழக்கு மாகாணத்தின் முதலாவது முதலமைச்சராக சி. சந்திரகாந்தன் பதவியேற்றார்.

அடுத்த இதழில் தொடரும் -----

# அவுஸ்திரேலியா அனுப்பும் முகவர் தமிழகத்தில் கைது!

தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளை அவுஸ்திரேலியா அனுப்ப முகவராக செயல்பட்ட இலங்கை அகதி உட்பட இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இலங்கைத் தமிழர்கள் பலர் தமிழகத்தில் அகதிகள் முகாம்களில் தங்கியுள்ளனர். இவர்களில், பலர் திடீரென அவுஸ்திரேலியா உள்ளிட்ட பல நாடுகளுக்கு அகதிகளாக தப்பிச் செல்கின்றனர். இதனைத் தடுக்கும் பொருட்டு, அகதிகள் முகாம்களை டுகியூடு பிரிவு பொலிஸார் கண்காணித்து வருகின்றனர்.

இந்நிலையில், தமிழகத்தின் பல்வேறு முகாம்களைச் சேர்ந்த இலங்கை அகதிகள் 120 பேர், கள்ளத்தனமாக விசைப் படகில் அவுஸ்திரேலியா தப்பிச் செல்ல முயன்றனர். அவர்களை, கடலோர காவல் படையினர் கைதுசெய்திருந்தனர்.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து, கடலோர பகுதிகளில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டது. அதில், தமிழகத்தில் பல்வேறு இடங்களில் உள்ள முகாம்களில் உள்ள அகதிகளிடம் பணம் பெற்றுக் கொண்டு கள்ளத்தனமாக அவுஸ்திரேலியாவிற்கு அனுப்பும் முகவர்கள் கடலூரில் தங்கியிருக்கும் தகவல் கியூ பிரிவு பொலிஸாருக்கு கிடைத்தது.

அதன்பேரில், கடலூர் துறைமுகம் பகுதியில் பதுங்கியிருந்த, கன்னியாகுமரி மாவட்டம், பெருமாள்புரம் முகாமைச் சேர்ந்த ரவிச்சந்திரன், புதுச்சேரி மாநிலம், வம்பா கீரப்பாளையத்தைச் சேர்ந்த வேலு ஆகியோரை கைதுசெய்து விசாரித்தனர்.

அதில், இவர்கள் இருவரும் மதுரை, மேலூரைச் சேர்ந்த வீரமணி, சேட்டு ஆகியோர் அவுஸ்திரேலியாவிற்கு இலங்கை அகதிகளை படகுகள் மூலம் அனுப்ப திட்டம் தீட்டியதும், இதற்காக கள்ளத் தோணி ஏற்பாடு செய்வது தெரிய வந்தது. அதனைத் தொடர்ந்து டுகியூடு பிரிவு பொலிஸார், இருவரையும் நேற்று கடலூர் துறைமுகம் பொலிஸில் ஒப்படைத்தனர்.

கைது செய்யப்பட்ட வேலு, கடந்தாண்டு ஒகஸ்ட் மாதம் கடலூரில் இருந்து இலங்கை அகதிகள் அவுஸ்திரேலியாவிற்கு தப்பிச் செல்ல விசைப்படகு ஏற்பாடு செய்த வழக்கில் கைதானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இணைய தளங்கள் மீது மீண்டும் சைபர் தாக்குதல்!

இலங்கையின் முக்கிய இணைய தளங்கள் மீது மீண்டும் சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பங்களாதேஷ் கிரே ஹெட் ஹெக்கர்ஸ் என்ற குழுவினால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சு, ஆளும் கட்சியின் பிரதம கொறடா, தயட்ட கிருள கண்காட்சி போன்றவற்றின் உத்தியோகபூர்வ இணைய தளங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இஸ்லாமிய மதத்தை இழிவுபடுத்திய காரணத்தினால் இவ்வாறு தாக்குதல் நடத்தப்படுவதாக ஹெக்கர்கள் குறிப்பிட்டுள்ளனர். இஸ்லாமிய மதத்தை இழிவுபடுத்தக் கூடிய தகவல்கள் வெளியிடப்படக் கூடாது என வலியுறுத்தப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இலங்கையில் தமிழ் - சிங்கள இலக்கியப்பரிவர்த்தனை

படைப்பிலக்கியவாதிகளினதும் ஊடகவியலாளர்களினதும் கலைஞர்களி னதும் பிரதான கடமை குறித்து தீவிரமாக சிந்தித்து செயலாற்றவேண்டிய காலத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்.

இலங்கையில் அரசியல்வாதிகளும் பேரினவாதிகளும் எவ்விதம் செயற்பட்ட போதிலும் மேலே குறிப்பிட்ட மூன்று பிரிவினரும் இனநல்லுறவு மத நல்லிணக்கம் இனமத மொழி வேறுபாடற்ற மனிதநேயம் என்பனபற்றி அக்கறையுடன் கலந்துரையாட வேண் டியது அவசியம். குறுகிய சிந்தனைகள்தான் மக்களை பிரிக்கும் அல்லது பிளவுபடுத்தும் சாத்தான். அந்த சாத்தானை ஓட ஓட கலைத்து விடவேண்டும்.

தேசிய இனப்பிரச்சினைக்கு மூலகாரணமாக இருப்பது மொழி மற்றும் இனம்சார்ந்த விவகாரங்கள்தான். ஆனால் மனிதநேயம் அனைவருக்கும் பொதுவானது.

நீரிழிவு - புற்றுநோய் - எயிட்ஸ் உட்பட பல உலகப்பிரசித்திபெற்ற நோய்கள் அல்லது உடல் உபாதைகள் எவருக்கும் வரலாம். ஒரு நோய் ஒருவரைத் தொற்றிக் கொள்ளும்பொழுது அவரது இனம் - மதம்




- மொழி பிரதேசம் பார்ப்பதில்லை. அதுபோன்று நோயாளிக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கும் மருத்துவர் (டொக்டர்) தன்னிடம் வரும் நோயாளியை இன - மத - மொழி வேறுபாடுகளுக்கு அப்பால் தான் கருணையுடன் சிகிச்சைக்கு உட்படுத்தி குணமடைவதற்கு பணியாற்று கிறார்.


அந்த வகையில் படைப்பாளிகளும் (Writers) ஊடகவியலாளர்களும் (Journalist) கலைஞர்களும் ( Artist) மக்களிடம் உருவாகும் இனமுறுகல் உபாதைகளுக்கு சிகிச்சை அளிக்கும் தொண்டர் களாக வேண்டும். அவர்கள தமது படைப்புகளின் ஊடாக நஞ்சை விதைத்தால் அந்த நஞ்சு இறுதியில் அவர்களையே அழித்துவிடும். ஒரு இனத்தின் தனித்துவம் - அடையாளம் -மொழி- மற்றும் கலாசாரம் என்பன பிற இனத்திற்கு க்ல - இலக்கியம் ஊடாகவே தெரியவரும். உதாரணமாக ஐரோப்பிய மொழி இலக்கியங்கள் - அமெரிக்கா - இங்கிலாந்து - அவுஸ்தி ரேலியா ஆங்கில மொழி இலக்கியங்கள் மற்றும் ஆபிரிக்க இலக்கியங்கள் ஊடாக அந்தந்த நாட்டின் இனங்களின் அடையாளம் - பண்பாடு - சிந்தனை என்பவற்றை எமது தாய் மொழியில் தெரிந்து கொள்வதற்கு மொழி பெயர்ப்புகள் பெரிதும் உதவியிரு க்கின்றன.

நாம் ஷேக்ஸ்பியரையும் - லியோ டோல்ஸ்ரோயையும் -தாஸ்தாயெவெஸ்கியையும் - மக்சிம் கோர்க்கியையும் - டி.எச். லோரன்ஸையும் -மாப்ப சானையும் - கலீல் ஜிப்ரானையும் -நஸ்ருல் இஸ்லாமையும் - ஹெமிங் வேயையும் - சினுவா ஆச்சுபேயையும் ஆங்கிலமொழி ஊடாகவே தெரிந்து கொண்டமைக்கு முக்கிய காரணம் அவர்களின் படைப்பு களின் மொழி பெயர்ப்புகள்தான்.

தமிழ் - சிங்கள வாசகர்கள் ஆங்கிலத்திலிருந்து அவர்களின் எழுத்துக்களை தத்தம் தாய்மொழிகளுக்கு மொழி பெயர்த்து தெரிந்துகொண்டோம். அதுபோன்று இலங்கையரான சிங்கள - தமிழ் - முஸ்லிம் மக்களும் பரஸ்பரம் மொழி பெயர்ப்புகளின் ஊடாக சகோதர இனங் களின் அடையாளத்தையும் கலாசாரத தையும் உணர்வுகளையும் தெரிந்து கொள்ள முடியும்.

ஓர் இனத்தை அடக்குவதன் மூலம் மற்றுமொரு இனம் சுதந்திரமாக வாழமுடியாது என்பது ஒரு சத்தியவாக்கு.

ஒரு குடும்பத்தில் கணவன் மனைவியை - அல்லது மனைவியை கணவன் அடக்கி ஆள



முருகபூபதி

முயன்றால் அந்தக்குடும்பத்தின் ஆரோககியம் சீர்கெட்டுப்போய்விடும் என்பது சாதாரண எளிய உதாரணம். அதனால்தான் நாம் வாழும் அவுஸ்திரேலியா போன்ற முன்னேற்றமடைந்த நாடுகள் - மனித உரிமையும் மனிதநேயமும் அவசியம் என்று வலியுறுத்திவருகின்றன.

இலங்கையில் சிங்கள - தமிழ் - முஸ்லிம் நல்லுறவுக்காகவும் இனநல்லிண க்கத்திறகாகவும். பல இலக்கியவாதிகள் அயராமல் தொண்டாற்றியிருக்கிறார்கள்.


இலங்கையில் முன்னர் சுமார் 30 வருடகாலமாக தமிழ்மக்கள் செறிந்து வாழ்ந்த யாழ்ப்பாணத்திலிருந்தும் பின்னர் சுமார் 17 வருடகாலமாக மூவின மக்களும் செறிந்து வாழும் கொழும்பிலிருந்தும் வெளியான மல்லிகை இலக்கிய மாத இதழ் - இனஒற்றுமைக்காக தொடர்ந்து குரல் எழுப்பி வந்தது. அதன் ஆசிரியர் டொமினிக் ஜீவா ஒரு முற்போக்கு இலக்கியவாதி. இலங்கையில் முதல் முதல் தமிழ் சிறுகதை இலக்கியத்திற்காக (தண்ணீரும் கண்ணீரும்) தேசிய சாகித்திய விருது பெற்றவர். அவரது மல்லிகை இதழ்களில் சிங்கள இலக்கியவாதிகள் மார்டின் விக்கிரமசிங்கா - எதிரிவீர சரச்சந்திரா - குணசேனவிதான - கே. ஜயதிலக்க - ஜி.பி. சேனாநாயக்கா - ஆரியரத்ன விதான கருணாசேன ஜயலத் - குணதாஸ அமரசேகர - மககமசேகர உட்பட பலரதும் படைப்புகள் தமிழுக்கு மொழிபெயர்க்கப்பட்டு வெளியாகியுள்ளன. அத்துடன் இவர்களில் சிலரதும் தமிழ் அபிமானியான வண.ரத்னவன்ஸதேரோ - சிங்கள திரைப்பட இயக்குநர் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் - நாடகக்கலைஞரும் இயக்குநருமான ஹென்றி ஜயசேன - நூல் பதிப்புத்துறையைச்சேர்ந்த சுமணசிறி கொடகே ஆகியோரதும் படங்களை மல்லிகையின் முகப்பில் பதிவுசெய்து அவர்தம் நேர்காணல்களையும் அவர்களைப்பற்றிய அறிமுகக்கட்டுரைகளையும் வெளியிட்டிருக்கிறது.

கொழும்பிலிருந்து வெளியாகும் ஞானம் இதழில் தெனகமசிறிவர்தன - குசும் அறம்பத் - பிலேமினா தில்றுக்ஷி - அரவிந்த சந்திரபத்ம - அமரபால கறசிங்ஹ ஆரச்சி - அஜித்பெரகும் ஜயசிங்க - முதலானோரின் பல சிங்களச்சிறுகதைகள் தமிழில் வெளியாகியுள்ளன. பெரும்பாலான கதைகளை ஆறுமுகம் தங்கவேலாயுதம் தமிழுக்குத்தந்துள்ளார். திக்குவல்லை கமாலும் சில கதைகளை ஞானம் இதழில் தமிழுக்கு வரவாக்கியுள்ளார். இதுவரையில் 150 இற்கும் மேற்பட்ட இதழ்களை வெளியிட்டு தொடர்ந்தும் வெளியாகும் ஞானம் இதழின் ஆசிரியர் டொக்டர் தி.ஞானசேகரன்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் ஜீவநதி இதழில் ஜயந்த தர்மசிறி விதான என்பவரின் சிறுகதையை திக்குவல்லை கமால் தமிழில் தந்துள்ளார். ஜீவநதி ஆசிரியர் கலாமணிபரணீதரன்.

மட்டக்களப்பிலிருந்து வெளியாகும் மகுடம் என்னும் காலாண்டிதல் மஞ்சுள வெடிவர்தனவின் கவிதைகளை தமிழுக்குத் தந்துள்ளன. அவற்றை மொழிபெயர்த்தவர் ஃபஹீமாஜகான். ஆனால் இந்தத் தகவல்கள் எத்தனை சிங்கள வாசகர்களுக்குத் தெரியும் என்பதுதான் என்போன்றவர்களின் கவலை.

மல்லிகை ஆசிரியர் டொமினிக்ஜீவா சிங்களப்படைப்புகளின் தமிழ் மொழி பெயர்ப்புகளை மட்டுமல்ல பல சிங்கள இலக்கியமேதைகளின் உருவப்படங் களையும் மல்லிகையின் முகப்பில் பதிவுசெய்து




டொமினிக்ஜீவா

அவர்களுக்கு கௌரவம் வழங்கியிருக்கிறார். இந்தப்பணியில் அவர் அயராமல் தொடர்ந்தவர். அதனாலும் அவருக்கு சாகித்திய ரத்னா விருதும் கிடைத்தது. அத்துடன் தேசத்தின் கண் என்ற விருதையும் பெற்றவர். இந்த அதியுர் விருதுபெற்ற மற்றவர் விஞ்ஞான எழுத்தாளர் ஆதர் ஸி கிளார்க்.

இலங்கைப்பாரளுமன்றத்தில் அவரது சேவைகுறித்து பாராட்டிப்பேசப்பட்டது. அவரது பல சிறுகதைகளின் தொகுப்பு .பத்ரவத்தய என்ற பெயரில் சிங்களத்தில் வெளியாகியது. மொழிபெயர்த்தவர் இப்னு அவமத்.

கடந்த ஆண்டு (2012) இறுதியில் இலங்கைக்கு நான் சென்றிருந்தவேளையில் - நான் ஏற்கனவே எழுதியிருந்த சிறுகதைகளில் சிலவற்றை தேர்ந்தெடுத்து சிங்களத்தில் மொழிபெயர்த்து வெளியிட எனது இனிய இலக்கிய நண்பர் திக்குவல்லை கமால் முயற்சிசெய்தார். அவரது நண்பரும் முன்னாள் பாடசாலை அதிப ருமான கராமத் என்பவர் சிங்களத்தில் மொழி பெயர்த்த மதக செவனலி என்ற நூலை ஆனமடுவ தோத ன்ன பதிப்பகம் வெளியிட்டது. இந்தப் பதிப்பகத்தை நடத்தும் சிட்னி மார்க்கஸ் டயஸ் என்ற சிங்கள அன்பரும் ஒரு படைப் பிலக்கியவாதி.

அத்துடன் ஏற்கனவே பல தமிழ் சிறுகதைகள் மற்றும் நாவல்களை சிங்களத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ள இனநல்லுறவின் அபிமானியான மடுளுகிரியே விஜேரத்தின அவர்கள் அவுஸ்தி ரேலியாவில் வதியும் டொக்டர் நொயல் நடேசனின் வண்ணாத்திக்குளம் என்ற நாவலை சமணலாவ என்ற பெயரில் சிங்களத்தில்




மொழிபெயர்த்தார்.

இந்நாவல் ஏற்கனவே தமிழில் இரண்டு பதிப்புகளை கண்டுவிட்டன. அத்துடன் வண்ணாத்திக்குளம் நாவலை ஆங்கிலத்தில் ( Butterfly Lake)) என்ற பெயரில் கொழும்பில் பிரபல நூல் வெளியீட்டு நிறுவனம் விஜித்தயாப்பா வெளியிட்டிருக்கிறது. ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் அவுஸ்திரேலியாவில் வதியும் நல்லைக் குமரன் குமாரசாமி.

தற்பொழுது இந்த நாவலை இலங்கையில் தொலைக்காட்சி நாடகமாக தயாரிக்க விருப்பதாக ஒரு தகவல் வெளியாகியுள்ளது. அந்தக்கதையை சிங்களத்திலும் தமிழிலும் தயாரிக்கமுடியும். இனநல்லுறவுடன் அரசியலும் காதலும் பேசும் நாவல் அது.மற்றுமொரு நடேசனின் தமிழ் நாவல் உனையே மயல்கொண்டு (Lost in You)என்ற பெயரில் ஆங்கிலத்தில் வெளியானது.

(மிகுதி அடுத்த வாரம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாட்டில் நடந்து முடிந்திருக்கும் மாணவர் போராட்டம் பற்றி பல்வேறு விவாதங்கள், சர்ச்சைகள் தொடர்ந்து நடந்த வண்ணம் உள்ளன.

போராட்டம் ஒரு பெரும் எழுச்சியின் அடையாளம்; இல்லையில்லை சின்ன அளவில் நடந்ததை தமிழ் தேசிய அமைப்புகள், புலிகள் ஆதரவு அமைப்புகளின் தீவிர இளைஞர்கள் பின்னின்று நடத்தி சேனல்களின் உதவியுடம் ஊதிப் பெரிதாக்கிக் காட்டிய போராட்டம்தான் இது சிறுவன் பாலசந்திரனின் படுகொலை பற்றிய படங்கள் கிளறிவிட்ட அடிப்படை மனித நேய உணர்ச்சிகளுக்கப்பால் மாணவர்களுக்கு உலக அரசியல் தெரியவில்லை, உள்ளூர் அரசியலும் தெரியவில்லை, உணர்ச்சி மட்டுமே இருக்கிறது; ஈழத்தமிழர்களின் முதல் தேவை அங்கே ராணுவ நீக்கமும், வாழ்வாதார வாய்ப்புகளும், படிப்படியான அரசியல்



# போராட்டமும் போதைகளும்!

உரிமைகளுமே தவிர, ராஜபக்ஷேவை தண்டிக்கக் கூக்குரலிடுவதால் ஒரு பயனுமில்லை; புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்களின் நலன் வேறு, ஈழத்திலேயே வாழும் தமிழர்களின் நலன் வேறு; இன்னொரு ஆயுதப் போராட்டம்தான் ஈழத்தைப் பெற்றுத்தரும்; இல்லையில்லை பொது வாக்கெடுப்பின்மூலமே அற வழியில் ஈழம் பெறமுடியும்; இரண்டும் சாத்தியமில்லை தனி ஈழம் அமைய ஒரு போதும் அமெரிக்கா, சீனம், இந்தியா மூன்று நாடுகளும் அனுமதிக்கப் போவதே இல்லை; ராஜபக்ஷே அரசின் மூலம் தங்கள் புவி அரசியல் லாபங்களுக்காக மூன்று நாடுகளும் காய் நகர்த்துவதைத்தவிர வேறேதும் நடக்கப் போவதில்லை; இல்லையில்லை 'மாணவர்கள் எழுச்சி அடுத்த கட்டத்தில் இந்திய ஒருமைப்பாட்டையே கேள்விக்குள்ளாக்கும் வலிமை உடையது 'என்று பலப்பல பார்வைகள் இந்த விவாதங்களில்



வெளிப்படுகின்றன.

இவை எதையும் என்னால் முழுமையாக ஏற்கவும் முடியாது; முழுமையாக நிராகரிக்கவும் முடியாது. எல்லா பார்வைகளும் கொஞ்சம் கொஞ்சம் உண்மைகளை, யதார்த்தத்தை தம்முள் வைத்திருக்கின்றன. கலைஞர் கருணாநிதியே புலம்பியது போல தி.மு.கவை மத்திய ஆட்சியிலிருந்து விலகச் செய்ததைத் தவிர வேறு எந்த நன்மையும் ஈழத்தமிழர்களுக்கு ஏற்பட்டுவிடவில்லை. போர் சமயத்தில்



இப்படிப்பட்ட நெருக்கடியைக் கொடுத்து போர் நிறுத்தம் செய்யவைத்து கொஞ்சம் உயிர்களையேனும் காப்பாற்றியிருக்கக் கூடிய கடமையை செய்யத் தவறியதற்காக இப்போது தி.மு.கவுக்கு தரப்பட்ட தண்டனையாக இந்த ஆட்சி விலகல் நிர்ப்பந்தத்தைக் கணித்து ஆறுதலடையலாம். ஆனால் ராஜபக்ஷே கும்பலுக்கோ, விடுதலைப் புலிகளுக்கோ அவரவர் போர்க் குற்றங்களுக்காக, அரசியல் பிழைகளுக்காக இப்படி தண்டனை அளிப்பது அவ்வளவு எளிதல்ல.

தமிழக மாணவர்களின் போராட்டத்தின் சக்தி என்பது தி.மு.கவை மத்திய அரசிலிருந்து பதவி விலக வைக்கும் அளவுக்குத்தான் உள்ளது. அதே சமயம் இந்தப் போராட்டம் எத்தனை குறைபாடுகள் நிரம்பியதாக இருந்தாலும், ஈழத் தமிழர் பிரச்சினையில் இந்திய அரசின் மெத்தனத்தை, தவறுகளை, இந்திய அரசியல் கட்சிகளின் அரைகுறை புரிதலை, அலட்சியத்தை,கடுமையாக வெளிப்படுத்த உதவியது.

மாணவர்கள் ஏன் இதே உந்துதலுடன் அண்மைக்காலத்தில் வேறு பிரச்சினைகளில் போராடவில்லை என்ற விமர்சனங்களும் எழுந்துள்ளன. காவிரி, முல்லைப் பெரியாறு, கூடங்குளம் அணு உலை எதிர்ப்பு, தர்மபுரி சாதிவெறித் தாக்குதல் போன்றவற்றில் இதே வீரியத்துடன் ஏன் போராடவரவில்லை என்று கேட்கப்படுகிறது. ஒரே காரணம்தான்.

அவை எதுவும் பாலசந்திரன் முகம் எழுப்பும் உணர்ச்சிகளை எளிதில் எழுப்பவல்லவை அல்ல. அவை எதுவும் உணர்ச்சி அடிப்படையில் போராடக் கூடிய பிரச்சினைகளும் அல்ல. அறிவார்ந்த தெளிவின் அடிப்படையில் மட்டுமே போராடப் படக்கூடியவை.

இப்போது நடந்த மாணவர் போராட்டம் போல 1965 மொழித் திணிப்பு எதிர்ப்புக்குப் பின்னர் இதுவரை நடந்ததில்லை என்றும் ஒரு கருத்து பேசப்படுகிறது. இவையெல்லாம் மிகைக் கருத்துகளேயாகும். இடது சாரி இயக்கங்களில், கட்சிகளில் தம்மை இணைத்துக் கொண்ட மாணவர்கள் எழுபதுகளிலும், எண்பதுகளிலும், தொண்ணூறுகளிலும், இரண்டாயிரங்களிலும் பல்வேறு பிரச்சினைகளில் போராடிக் கொண்டுதான் இருக்கிறார்கள். கடைசியாகக் கூட சமச்சீர் கல்வியின் சுணக்கம் ஏற்பட்டதை எதிர்த்தும், பள்ளிக்கட்டண விஷயத்திலும் போராடிக் கொண்டுதான் இருந்தார்கள்.

கட்சிகளை சாராமல் மாணவர்கள் போராடுவதாகக் காட்ட விரும்பும் மீடியா, அரசியல் இயக்கங்கள் சார்ந்த மாணவர்கள் இளைஞர்கள் போராட்டங்களை எப்போதுமே பெரிதாக சித்திரிப்பதில்லை. எல்லா அரசியல் கட்சியும் மோசம் என்ற பார்வையை விரும்பும் மீடியா அதை ஊக்குவிக்க வசதியாக அண்மை மாணவர் போராட்டத்தை வடிவமைத்துக் காட்டியது என்பதும், இதை தங்களுக்கு வசதியான தந்திரோபாயமாகக் கருதிய அரசியல் சக்திகள் முகம் காட்டாமல் மாணவர்களுக்குப் பின் நின்றன என்பதும் மீடியா-

**- ஞாநி**

அரசியல் ஆய்வுக்கான விஷயங்கள்.


மாணவர்கள் இன்னின்ன விஷயங்களுக்காகப் போராடவில்லை என்று பட்டியல் போடுவதில் ஓரளவுக்கு மேல் அர்த்தமில்லை. போராடியதை மீடியா எப்படிக் காட்டுகிறது என்பது முக்கியம். எதற்குப் போராடுகிறார்களோ அதை எப்படி என்ன புரிதலோடு போராடுகிறார்கள் என்பது முக்கியம். அவ்வளவுதான். முதலில் மாணவர்கள் எதற்குமே ஏன் போராடவேண்டும் என்று கேட்பவர்களும் உண்டு. படிக்கும் வயதில் படித்து அறிவையும் திறமைகளையும் வளர்த்துக் கொள்வதைத் தவிர வேறு எதிலும் கவனத்தை சிதறவிடக் கூடாது. அப்போதுதான் பின்னாளில் எந்தத் துறையிலும் எந்தப் பிரச்சினையையும் எதிர்கொண்டு தீர்க்க அவர்களால் இயலும் என்று கருதுவோர் உண்டு. அண்மையில் சென்னைப் பல்கலைக்கழக மீடியா துறைக் கருத்தரங்கில் பேசிய ஒரு பேராசிரியர், தங்கள் ஆசிரியர்களான மு.வ, பாலசுப்ரமணியம் ஆகியோர் அறுபதுகளிலும் எழுபதுகளிலும் மொழிப் போராட்டத்திலேயே மாணவர்கள் பங்கேற்பதை ஆதரிக்கவில்லை என்று தெரிவித்தார். தேர்வுக் காலங்களில் செய்தித்தாள்களைக் கூட தினசரி படிக்காமல் சேர்த்துவைத்து ஒரு மாதம் கழித்து மொத்தத்தையும் படித்தால் போதும் என்று அறிவுரைகள் சொல்லப்பட்டதாம். மாணவப் பருவத்தில் உலகில் அரசியலில் சமூகத்தில் என்ன நடக்கிறது என்று அறிந்து வைத்துக் கொள்ளவேண்டும் ; ஆனால் ஈடுபடக் கூடாது என்பதே அந்தப் பார்வை.

அறிந்து வைத்துக் கொள்வது என்பதே இன்று பெரும் சிக்கலாக இருக்கிறது. மாணவர்களை, இளைஞர்களை அறியாமையில் வைத்திருப்பதையே அதிகாரத்தில் இருக்கும் எல்லாரும், குடும்பம் முதல் அரசு வரை விரும்புகிறார்கள். பிழைக்கும் வழி மட்டும் தெரிந்தால் போதுமென்கிறது குடும்பம். உழைக்கும் வழி மட்டும் தெரிந்து கொள் என்கின்றன அரசு, தனியார் நிர்வாகங்கள்.

ஈழத் தமிழர்களின் இன்னலை தமிழக மாணவர்களால் துடைக்க முடியுமா என்பதை விடப் பெருங்கவலையாக எனக்கு இருப்பது, தமிழக இளைஞர்களை, மாணவர்களை மதுவிலிருந்து காப்பாற்ற முடியுமா என்பதுதான்.

சினிமா, டி.வி போதைகள் தவிர மது போதையும் மாணவர்கள் மத்தியில் வேகமாகப் பரவிக் கொண்டிருக்கிறது. மது குடிக்க ஆரம்பிக்கும் வயது 12,13 ஆகிக் கொண்டிருக்கிறது. பியர், ஒயின் மட்டும்தான் என்று தொடங்கி ஏது கிடைத்தாலும் சரி என்ற சரிவு நிலையை நோக்கி போகிறது மதுப் பழக்கம். சாலை விபத்துகள்,குடும்பச் சீரழிவு, உழைக்கும் திறன் நலிவு என்று பல கோணங்களில் மது இன்று தமிழகத்தை பாதித்துக் கொண்டி ருக்கிறது.

இந்த வாரம் மூன்று பெண்களை சந்தித்தேன். மூவருக்கும் வயது சுமார் 30லிருந்து 40க்குள்தான். இரண்டு பேர் இருபது வருடங்களுக்கு முன்னர் எங்கள் வட்டாரத்தில் வீட்டுப் பணியாளர்களாக இருந்தவர்கள். இன்னொருத்தி எங்கள் குடியிருப்பின் நடைபாதையில்



குடியிருந்த ஒரு தொழிலாளியின் மகள். மூவரையும் சிறுமிகளாக அறிவேன். மூவருமே உற்சாகமும் துடிப்பும் உழைப்பும் நிரம்பிய வர்களாக அப்போது இருந்தவர்கள். இப் போது உழைப்பு மட்டும்தான் எஞ்சியிரு க்கிறது.

இப்போது மூவரும் விதவைகள். மூவரின் கணவர்கள் மரணத்துக்கும் காரணமாக அமைந்தது மதுதான். ஒவ்வொரு வாரமும்

(11ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி திட்டங்களை பார்க்க வருமாறு புலம்பெயர் விமர்சகர்களுக்கு அழைப்பு!

மூன்று தசாப்தமாக நிலவிய பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டு நாட்டில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்களை வந்து பார்க்குமாறு பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ புலம்பெயர்ந்து விமர்சனங்களை முன்வைத்து கொண்டிருப்போருக்கு அழைப்பு விடுத்தார்.

மட்டக்களப்பு, தொப்பிகலையில் (குடும்பிமலையில்) நிர்மாணிக்கப்பட்ட இராணுவ நினைவுத் தூபியை திறந்துவைத்து உரையாற்றும் போதே அவர் மேற கண்டவாறு தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக தொப்பிகலையில் இராணுவ பாரம்பரியத்தை வெளிக்காட்டும் வகையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பாரம்பரிய பூங்காவையும் பாதுகாப்பு செயலாளர் திறந்துவைத்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்த பகுதியில் வாழ்ந்த மக்கள் தங்க



ளுடைய சொந்த இடங்களை கைவிட்டு விட்டு வாழ்ந்து வந்தனர். அழகிய பிரதேசமான இந்த பிரதேசம் தற்போது அபிவிருத்தியடைந்து வருகி ன்றது. அதனை புலம்பெயர்ந்தவர்கள் பார்க்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இராணுவ தளபதி லெப். ஜெனரல் ஜகத் ஜயசூரியவின் அனுசரணையின் கீழ் கிழக்கு மாகாண இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் லால் பெரேராவின் அழைப்பின் பேரிலேயே தொப்பிகலை பிரதேசத்திற்கு கோட்டாபய ராஜபக்ஷ விஜயம் மேற்கொண்டிருந்தார். இந்த நிகழ்வில் முப்படைகளின் தளபதிகள், பொலிஸ் மா அதிபர் என்.கே.இளங்கோன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# வடக்கில் ராணுவ பிரசன்னம்: வாசுதேவ நாணயக்கார தகவல்!



வடக்கில் அதிகளவு இராணுவப் பிரசன்னம் இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறிவருவது முற்றிலும் உண்மையென சமூக மேம்பாடு மற்றும் தேசிய மொழிகள் தொடர்பான அமைச்சர் வாசுதேவ நாணயகார தெரிவித்துள்ளார்.

இதேவேளை வடக்கில் சிங்களக் குடியேற்றங்களை அரசாங்கம் மேற்கொள்கின்றது என்ற குற்றச்சாட்டை அவர் மறுத்துள்ளார்.

வடக்கில் இனப்பரம்பலில் அரசாங்கம் மாற்றத்தை ஏற்படுத்தி வருவதாக கூட்டமைப்பினர் கூறும் குற்றச்சாட்டானது ஏற்க முடியாதது. ஆனால் வடக்கில் இராணுவப் பிரசன்னம் அதிகம். குடியியல் நிர்வாகத்தில் இராணுவத்தினர் தலையீடுகள் உள்ளன. வடக்கில் குடியியல் நிர்வாகம் இல்லை. எனவே இராணுவப் பிரசன்னத்தைக் குறைத்து இராணுவத்தை முகாம்களுக்குள் முடக்கி முழுமையான குடியியல் நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டும் என்றார்.

இதேவேளை அரசாங்கம் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை படிப்படியாக அமுல்படுத்தி வருகின்றது. வடக்கில் தமிழ் மக்களை அரசாங்கம் அடிமைப்படுத்தவில்லை. தமிழ் மக்களின் தேவைகளை அரசாங்கம் நிறைவேற்றி வருகிறது எனவும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டார்.

# யுத்தத்தின்போது, வடக்கில் 19420 சிறுவர்கள் அவயவங்களை இழந்தனர்!

இலங்கையின் இறுதி யுத்தத்தின்போது, வடமாகாணத்தின் மூன்று மாவட்டங்களில் 19 ஆயிரத்து 420 சிறுவர்கள் அவயவங்களை இழந்து பாதிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் மேற்கொண்டுள்ள கணிப்பீடுகளில் தெரியவந்திருப்பதாக வலிகாமம் மேற்கு பிரதேச சபை உறுப்பினர் தர்மலிங்கம் நடனேந்திரன் தெரிவித்திருக்கின்றார்.

இவர்கள் கை கால்களை இழந்தும், கண்களை இழந்தும் வேறு பல அவயவங்களை இழந்துமிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

எனினும் இச்சிறுவர்களுக்கு இதுவரையான காலப்பகுதியில் போதிய அளவில் வாழ்வாதார நலச் சேவைகள் வழங்கப்படவில்லை. அவர்கள் அருகில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்பதற்குக் கூட ஏற்பாடுகள் செய்யப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து கருத்து தெரிவித்த விசேட கல்விக்கான ஆசிரிய ஆலோசகரும், ஒர்கான் எனப்படும் மாற்று வலுவுள்ளோருக்கான புனர்வாழ்வு நிறுவனத்தின் தலைவருமாகிய வி.சுப்பிரமணியம், இத்தகைய பிள்ளைகளின் கல்வி விடயத்தில் அரசாங்கம் கவனம் செலுத்தி செயற்பட்டு வருவதாகக் கூறினார்.

அவயவங்களை இழந்த பிள்ளைகளின் கல்விக்காக விசேட கல்விப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டு, அவர்களுக்கு, குறிப்பாக பார்வையிழந்த மாணவர்களுக்கு பிரெயில் முறையில் கற்பிக்கவும், செவிப்புலனை இழந்தவர்களுக்கு சைகை மொழியில் கற்பிப்பதற்கும் ஆசிரியர்கள் பயிற்சியளிக்கப்பட்டு பாடசாலைகளில் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

எனினும், இந்தப் பிள்ளைகள் குடும்பங்களில் பெற்றோர்களின் சுமையாக மாறியிருப்பதுடன், இவர்களைப் பராமரிப்பதற்கென பெற்றோர் அதிக செலவு செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். ஆனால், அதற்கேற்ற வகையில் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் உள்ள குடும்பங்களின் வருமானம் அதிகரிக்கப்பட்டதாகவோ, அல்லது அவர்களுக்கு பொருளாதார உதவிகள் வழங்கப்பட்டதாகவோ இல்லை என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

# உதயன் தாக்குதல்:விசேடகுழ விசாரணை!

கடந்த 13 ஆம் திகதி மூன்று இனந்தெரியாத நபர்கள் உதயன் பத்திரிகையின் அச்சகத்தின் மீது தாக்குதல் நடத்தியது குறித்து பொலிஸ் குழுவொன்று விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. இது தொடர்பாக அச்சகத்தில் பணியாற்றும் ஊழியர்கள் உட்பட 12 பேரிடம் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன.

கடந்த 13 ஆம் திகதி அதிகாலை ஆயுதம் தாங்கிய மூன்று நபர்கள், உதயன் பத்திரிகையின் அச்சகத்தில் பணியாற்றிய இரண்டு காவலாளிகளை தாக்கி விட்டு, அச்சு இயந்திரங்களை துப்பாக்கியால் சுட்டு சேதப்படுத்தியதுடன், பத்திரிகைகளையும் தீவைத்து எரித்துள்ளனர். உதயன் பத்திரிகை அலுவலகத்திற்கும், அங்கு பணியாற்றும் ஊழியர்களுக்கும், 9 முறை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு, தாக்குதல்களும் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அதேவேளை உதயன் பத்திரிகையின் அச்சகத்தில் பொருத்தப்பட்டுள்ள பாதுகாப்பு கமாராக்களில் இந்த சம்பவங்கள் பதிவாகவில்லை என்பதே தமக்கு பிரச்சினையாக இருப்பதாக பொலிசார் தெரிவித்துள்ளனனர்.

இதனிடையே இந்த தீவைப்பு சம்பவம் தொடர்பாக நிரபராதிகளான இராணுவத்தினர் மீது குற்றம் சுமத்த வேண்டாம் என இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

## மூன்று கடதாசி சுருள்களுக்கே உதயன் தாக்குதலில் சேதம்!

யாழ்ப்பாணத்தில் வெளியாகும் உதயன் பத்திரிகை அலுவலகம் மீதான தாக்குதலின்போது அச்சு இயந்திரங்களுக்கு எந்த சேதமும் ஏற்படவில்லை எனவும் மூன்று அச்சு கடதாசி சுருள்களுக்கே சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் திவயின பத்திரிகை கூறியுள்ளது.

உதயன் மீது நடத்தப்பட்டதாக கூறப்படும் இந்த தாக்குதல் அதன் உள்ளுக்குள் நடத்த செயற்பாடு எனவும் இராணுவத் தகவல்கள் தெரிவித்துள்ளன. குறித்த பத்திரிகை அலுவலகம் தீவைக்கப்பட்டு முழுமையாக அழிக்கப்பட்டுள்ளதாக புலம்பெயர் புலிகள் பொய் பிரசாரங்களை மேற்கொண்டுள்ளனர். இந்த நிலையில் சம்பவம் குறித்து ஆய்வுகளை மேற்கொள்ள அரச பாகுப்பாய்வாளர் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் செல்ல உள்ளதாக சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலதிக விசாரணைகளை நடத்துவதற்காக பொலிசார் உதயன் அலுவலகத்திற்கு சீல் வைத்துள்ளனர்.

**உதயன் தாக்குதல்:**

## சி.சி.ரி.வி பாதுகாப்பு கமெராக்கள் தாக்குலுக்கு முன் செயலிழந்தது எப்படி?

யாழ்ப்பாணத்தில் அமைந்து உதயன் நாளிதழின் பிரதான காரியாலயம் மீது தாக்குதல் நடைபெற்ற தருணத்தில் காரியாலயத்தில் இருந்த சி.சி.ரி.வி பாதுகாப்பு கமெராக்கள் செயலிழந்திருந்ததாக முதல் கட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக சிறிவர்தன குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் கஸ்னரியால் வீதியில் அமைந்துள்ள உதயன் பிரதான காரியாலயத்தின் அச்சியந்திர பகுதிக்குள் ஆயுதம் தரித்த 3 பேர் நுழைந்து தாக்குதல் நடத்தியதுடன் தீயிட்டு கொளுத்தியதில் அச்சு இயந்திரங்கள் சிலவற்றிற்கும், அச்சுக்காக பயன்படுத்தப்படவிருந்த காகிதாதிகள் தொகையொன்றும், விநியோகத்திற்கு தயாராகவிருந்த நாளிதழ்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டது.

தொடர்ந்து வேலை செய்துகொண்டிருந்த சி.சி.ரி.வி பாதுகாப்பு கமெராக்கள் தாக்குதல் நடை பெறுவதற்கு குறிப்பிட்ட நேரத்திற்கு முன் மட்டும் எவ்வாறு செயலிழந்தது என்பது தொடர்பில் விசாரணைகள்ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் விரைவில் இந்த குற்றத்துடன் தொடர்புபட்டவர்கள் வெளி உலகத்திற்கு அடையாளம் காட்டப்படுவார்கள் என குறிப்பிட்டார்.

மேலும் இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக இதுவரை யாரையும் கைதுசெய்யவில்லை எனக்குறிப்பிட்ட அவர் இது குறித்து ஆராய 3 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக சிறிவர்தன குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் 'துக்ளக்' -இங்கு நடக்கும் போராட்டங்கள் -அங்கு நிலவும் கருத்துக்கள்

தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி தவிர அனேகமாக மற்ற எல்லா அரசியல் கட்சிகளுமே மாணவர் போராடடங்களுக்கு ஆதரவாக தமிழ் ஈழக்கோரிக்கையை வலியுறுத் துகின்றன.இங்கு புத்த பிக்குகள் தாக்கப்படுகின்றார்கள். ஆன்மீகச் சுற்றுப்பயணம் வரும் பக்தர்கள் அடித்துத் தாக்கப்படுகின்றார்கள்.இலங்கை அரச அலுவலகங்கள் தாக்கப்படுகின்றன. அரசியல் சார்பில்லாத மாணவர்கள் கூட தமிழ் ஈழத்திற்காகக் குரல் கொடுக்கின்றார்கள்.
இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக இங்கு நடக்கும் போராட்டங்கள் பற்றி இலங்கையில் உள்ள தமிழர்களும் இலங்கையிலிருந்து வெளியாகும் தமிழ்ப்பத்திரிகைகளும் என்ன சொல்கின்றன.
நமது நிருபர்கள் நேரடியாக இலங்கை சென்று அங்கு ஆறு நாட்கள் கொழும்பு,யாழ்ப்பாணம், கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு,முள்ளிவாய்க்கால், முல்லைத்தீவு, வவுனியா, மட்டக்களப்பு, கண்டி ஆகிய நகரங்களுக்குச் சென்று அங்குள்ள தமிழ் மக்களை தமிழ்த் தலைவர்களைச் சந்தித்து வந்துள்ளனர்.
அத்துடன் இலங்கை அரசு துணையோடு இராணுவ அதிகாரிகள், இலங்கை இராணுவத்தில் இணைந்திருக்கும் தமிழ்ப்பெண்கள், மறுவாழ்வு இல்லத்தில் இருக்கும் முன்னாள் புலிகள் ஆகியோரையும் சந்தித்துப் பேசி எல்லோரின் உரையாடல்களையும் ஆடியோ மற்றும் வீடியோவில் பதிவு செய்து கொண்டு வந்துள்ளனர்.
நமது நிருபர்கள் இலங்கையில் உள்ள நிலைமைகள் பற்றி இந்தச் சிறிய கட்டுரைத் தொடரின் முதல் அத்தியாயமாக இலங்கைத் தமிழர்கள் சிலர் தெரிவித்த கருத்துக்கள், இங்கே இடம் பெறுகின்றன. ஆ-ர்



**வீ.தனபாலசிங்கம் (ஆசிரியர் - தினக்குரல் நாளிதழ்) யாழ்ப்பாணத் தமிழர்**

"தமிழக அரசியல்வாதிகளின் போராட்டங்களை நாங்கள் பெரிதாக எடுத்துக் கொள்வது கிடையாது. அவர்கள் அங்கு ஓட்டு வாங்குவதற்காக இலங்கை விவகாரத்தில் பல நிலைப்பாடுகளை எடுப்பார்கள். ஆனால் மாணவர்களின் போராட்டம் உணர்வுபூர்வமானது. அதை நாங்கள் பெரிதும் மதிக்கின்றோம். ஆனால் அப்படிப் போராடும் முன்பாக எங்களின் தேவை என்ன என்பதை அறிந்து போராடவேண்டும். இல்லையென்றால் எங்கள் கோரிக்கை ஒன்றாகவும் அவர்கள் கோரிக்கை ஒன்றாகவும் இருந்தால் அது எல்லோர்க்கும் தோல்வியைத் தந்துவிடும்.
தமிழ் ஈழம் என்ற கோரிக்கையை நாங்கள் கைவிட்டு விட்டோம். இவ்வளவு அனுபவங்களுக்கு பிறகு மீண்டும் 'தமிழ் ஈழம்' என்ற கோரிக்கையை கையிலெடுத்தால் அது எஞ்சியுள்ள தமிழர்களின் எதிர்காலத்தைப் பாழடித்து விடும்.இன்றைய நிலையில் அது சாத்தியமில்லாத கோரிக்கை.எப்படி இலங்கை அரசாங்கம் எங்களுக்கு உடன்பாடில்லாத விஷயங்களை எங்கள் மீது திணிக்கக் கூடாது என்று நினைக்கின்றோமோ, அப்படித் தான் தமிழகத் தமிழர்களும் எங்கள் ஆலோசனை களில்லாமல் எங்கள் மீது எதனையும் திணிக்கக்கூடாது என்று நினைக் கின்றோம். உங்கள் அன்புக்குத் தலை வணங்குகின்றோம். ஆனால், அது எங்களுக்கு அனுகூலமானதாக இருக்க வேண்டும்."



**வீ.ஆனந்த சங்கரி (செயலாளர் தமிழர் விடுதலைக் கூட்டணி)**

"தனித் தமிழ் நாடு என்ற கோரிக்கையை நாங்கள் துவங்கும் முன்பே துவக்கியவர்கள் இந்தியத் தமிழர்கள் தான். அந்தக் கோரிக்கையை நீங்களே கைவிட்டு விட்டீர்கள். அதிகாரம் பொருந்திய மாநில அரசு என்ற நிலைக்கு நீங்கள் பழகி கொண்டீர்கள். தற்போது அதில் திருப்தியடைந்து நிம்மதியாக வாழ்கிறீர்கள். இதையே தான் இங்குள்ள தமிழர்களும் விரும்புகின்றோம்.அதைப் பெற்றுத் தரும் வகையில் உங்கள் போராட்டம் அமையு மானால் அது பாராட்டுக்குரியது.சிங்களத் தலைவர்கள் பலர் தங்கள் அரசியலுக்காகப் பல தவறுகளைச் செய்யலாம். ஆனால் பெரும்பாலான சிங்கள மக்கள் நல்லவர்கள். அவர்களைத் தமிழகத்தில் வைத்து தாக்குவது மிகவும் தவறானது.காந்தி பிறந்த மண்ணில் அது நடக்கக்கூடாது. அது எங்களைத் தான் மேலும் பாதிக்கும்."



**யோகேஸ்வரி பற்குணராசா (மேயர், யாழ்ப்பாணம்)**

"சுமார் எட்டுக் கோடித் தமிழர்கள் வசிக்கும் தமிழ்நாட்டைத் தனிநாடாக்க முடியவில்லை. மொத்த சனத்தொகையில் இரண்டு கோடி கொண்ட இலங்கையில் முஸ்லிம் தமிழர்களைத் தவிர்த்து மலையகத் தமிழர்களைத் தவிர்த்து இந்திய வம்சாவளித் தமிழர்களைத் தவிர்த்து, வெறும் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதித் தமிழர்கள் சில லட்சம் பேருக்கு மட்டும் ஒரு தனி நாடு கேட்பது எந்த விதத்தில் சாத்தியப்படும் என்பதை புலிகள் மற்றும் அவர்களுக்கு நெருக்கமான ஆதரவாளர்களைத் தவிர மற்ற எல்லோருமே தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டுப் பல காலம் ஆகி விட்டது.தற்போது அதைக் கையில் எடுத்துப் போராடுவது இலங்கைத் தமிழர்களின் எதிர்காலம் குறித்த மிச்ச கனவுகளையும் திசை மாற்ற மட்டுமே உதவும்.தமிழகத்தில் நிலவும் வதந்திகளை நம்பாதீர்கள். இங்கு வாழ்வது நாங்கள். இங்கு வந்து பாருங்கள். தற்போதைய உங்கள் போராட்ட வடிவம் எங்களுக்கு நன்மை தராமல் பாதிப்பு ஏற்படுத்து வதற்கே வாய்ப்பு அதிகம் என்பதை தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள்.

## இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைகளின் குரல்

**என்.நடேசன் (இலங்கையில் வெளியாகும் 'தினமுரசு தமிழ் நாளிதழ் 1.4.13-பக்கம் 5-ல் எழுதியுள்ள கட்டுரையிலிருந்து) :**

"அக்காலத்தில் பிரபாகரன் ஒன்றரைக் கோடி சிங்களரை எதிரியாக்கியதும், பின்பு ராஜீவ் காந்தியைக் கொன்று இந்திய மக்களை எங்களுக்கு எதிரியாக்கிய படுமுட்டாள் தனமான வேலையைக் காட்டிலும், இன்று மிக மோசமான வேலையை இலங்கைத் தமிழருக்கு எதிராகச் செய்கிறார்கள் தமிழ்நாட்டில் உள்ள அரசியல்வாதிகள். தமிழ்நாட்டில் வைத்து புத்த பிட்சுகளை அடிப்பது, துன்புறுத்துவதன் மூலம் இலங்கைத் தமிழருக்கு எதிராக, உலகத்தில் உள்ள அறுபது கோடி புத்த மக்களையும், அவர்களின் அரசாங்கங்களையும் ஊண்டி விடுகிறீர்கள். நான் எழுதுவதில் சந்தேகம் இருந்தால், ஜெனீவா தீர்மானத்தில் இலங்கைக்கு ஆதரவு மற்றும் நடுநிலை கடைபிடித்த நாடுகளின் பட்டியலைப் பாருங்கள். இலங்கை அரசாங்கம் உங்களின் செயல்களிலிருந்தே பலம் பெறுகிறது.சிங்கள இனவாதத்தின் கொம்புகளைச் சீவாதீர்கள். நாங்கள்தான் மீண்டும் ரத்தம் சிந்த வேண்டும்."

**மனோ கணேசன் (தலைவர், ஜனநாயக மக்கள் முன்னணி)இலங்கையில் வெளியாகும் 'தினக்குரல்' (31.3.13) நாளிதழுக்கு அளித்துள்ள பேட்டியில்:**

"தமிழக சட்டப் பேரவையில் தமிழீழத்திற்கான வாக்களிப்பு நடைபெறவேண்டும் என்ற தீர்மானம் முன் வைக்கப்பட்டுள்ளது.வாக்கெடுப்பு அல்லது வாக்களிப்பு எங்கு நடைபெற வேண்டும் என்ற தெளிவு இல்லை. ஒரு காலத்தில் புலிகளின் ஆட்சிக்கு உட்பட்ட ஒரு பிரதேசம் இருந்தது. அப்போது இத்தகைய ஒரு தீர்மானம் வந்திருந்தால், பொருத்தமாக இருந்திருக்கும். தமிழகத்தில் இருந்தபடி இலங்கையில் வாழும் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு மற்றும் குறிக்கோள்கள் அறிவிக்கப்படும்போது,அவற்றை இலங்கை வாழ் தமிழரகளின் அரசியல் தலைமைகளுடன் புரிந்துணர் வுகளை ஏற்படுத்திக் கொண்டு அறிவிக்கப்பட வேண்டும். தமிழக முதல்வர் மற்றும் போராடும் மாணவர்கள் இலங்கை வாழ் தமிழர்களுடன் பேசியதாகத் தெரியவில்லையே?
"மனித உரிமை மீறல் என்பதுதான் இன்றயை உலகை உலுக்கும் மகா மருந்து.ஆனால், தனி நாடு, பொது வாக்கெடுப்பு என்ற அரசியல் கோரிக்கைகள் முன்வைக்கப்படும் போது,அவற்றை உலகம் இன்றையச் சூழலில் வரவேற்காது; உலக மனித உரிமை அமைப்புகளின் ஆதரவும் கிடைக்காது; இந்திய அரசும் நிராகரிக்கும். பாருங்கள், தமிழக சட்ட சபையின் தீர்மானங்களை மத்திய அமைச்சரே நிராகரித்து விட்டார்."அரசியல் தீர்வு கோரிக்கைகளை தமிழகம் இலங்கைத் தமிழ்த்தலைமைகளிடம் விட்டு விட வேண்டும். மாகாண சபையா? சமஷ்டியா? கூட்டாட்சியா? தனி நாடா? அது எதுவானாலும் அவற்றை இங்கு வாழும் தமிழர்களின் தலைமை தீர்மானித்து அறிவிக்கட்டும். தமிழக மாணவர்களும், சட்டசபையும் மனித உரிமை மீறல்களை முன்னிறுத்தி போராட்டங்களையும் தீர்மானங்களையும் முன்னெடுக்கட்டும்.

**கங்கா (பஸ் ஆபரேட்டர்- யாழ்ப்பாணம்)**

'இறுதிப் போர் முடிந்து நான்கு ஆண்டுகள் ஆகப் போகின்றது. இங்கு தனி ஈழம் தான் தீர்வு என்று நாங்கள் நினைத்திருந்தால் இந்த நான்கு ஆண்டுகளில் இங்கு ஒருவராவது உண்ணாவிரதம் இருந்திருக்கமாட்டோமா? தீக்குளித்திருக்கமாட்டோமா? அப்படி எந்தச் செய்தி யாவது உங்களை வந்தடைந்ததா? பிறகு ஏன் அங்குள்ள இளைஞர்கள் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்கிறார்கள் என்று தெரியவில்லை.மொத்த இலங்கை அளவு கொண்ட தமிழகத்தை தனிநாடாகக் கேட்டால் டெல்லி கொடுக்குமா? பிறகு அந்த அளவை விட மிகச் சிறிதான பகுதியை தனி நாடாக இங்கு எப்படிப் பெற முடியும்? கடந்த 30 வருடங்களாக போர் என்ற பெயரில் நரகவாழ்க்கை வாழ்ந்து வந்த நாங்கள் இப்போது தான் நிம்மதியாக வாழத் தொடங்கியுள்ளோம். எங்களின் அரசியல் தீர்வுக்கு உதவுங்கள். அதற்கு இந்தியாவைத் தயார்ப்படுத்துங்கள். அது தான் நீங்கள் எங்களுக்குச் செய்யும் நிஜ உதவியாக இருக்கும்."

**பெயர் சொல்ல விரும்பாத தமிழ்ப் பத்திரிகையாளர்**

"தமிழக மாணவர்களுக்கு நான் வைக்கும் வேண்டுகோள் இது தான். தங்கள் தனிநாடு கோரிக்கை இந்தியாவில் எடுபடாது என்பதை உறுதி செய்து கொண்டதன் பின்னர் அந்த ஆசையைக் கைவிடமுடியாத அங்குள்ள சில அரசியல்வாதிகள் அவர்கள் ஆசையை உங்களிலும் எங்கள் மீதும் திணிக்கப் பார்க்கின்றார்கள். நன்கு வசதியாக இருக்கும் புலம்பெயர்ந்த தமிழர்களிடம் சலுகைகளை அனுபவிக்கும் அந்த அரசியல்வாதிகளின் ஊண்டுதலுக்கு ஆளாகி உங்கள் கல்வியைப் பாழடித்துக் கொள்ளாதீர்கள். ஒரு அரசியல் கூட்டணிக்குப் போனால், இரண்டு டிஜிட் ஸீட் கூட வாங்க முடியாத சில சின்ன சின்ன அரசியல் தலைவர்கள் அவர்களின் அரசியல் ஸ்திரத் தன்மைக்காக உங்கள் வாழ்க்கையை பலியாக்குகின்றார்கள். இந்த மண்ணில் எங்கள் இளைஞர்கள் வாழ்க்கையைத் தொலைத்தது போதும். அங்குள்ள இளைஞர்களான நீங்களும் உங்கள் வாழ்க்கையைத் தொலைத்துவிடாதீர்கள்.
இங்கு தனிநாடு என்பது சாத்தியமில்லை.எங்களுக்கு நல்லது செய்ய நினைத்தால் அரசியல் தீர்வு தமிழர்களுக்கு சமஉரிமை என்பதான கோரிக்கைகளுக்காகப் போராடுங்கள்.அது தான் யதார்த்த நிலைமை. அது தான் எங்களுக்கு நன்மை பயக்கும். எங்கள் மீது அன்பு செலுத்தும் நீங்கள், நாங்கள் வாழும் நாட்டை எதிரி நாடு என்று அறிவிக்கச் செய்வதில் என்ன லாபம் அடைவீர்கள்? இலங்கை மீது பொருளாதாரத் தடை விதித்தால், இங்குள்ள மக்கள் அரிசி, பருப்பு, எண்ணெய்,சோப், துணிமணிகளுக்கு எங்கே போவோம்? அவை வேறு நாடுகள் வழியாக எங்களுக்கு வந்து சேரும். விலையும் அதிகமாகும். வழியில் யார் யாரோ கொள்ளை லாபம் சம்பாதிப்பார்கள். இதையா நீங்கள் விரும்புகின்றீர்கள்?"



**கிளிநொச்சி வி. சகாதேவன் (போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் இயக்கத்தின் தலைவர்)**

"அங்கு போராடும் இளைஞர்கள் ஒருமுறை இங்கு வந்து பார்த்து, இங்குள்ள மக்களைச் சந்தித்த பிறகு, உங்கள் போராட்டக் கோரிக்கைகளை வடிவமைக்க வேண்டும் என்று அன்போடு அழைப்பு விடுக்கிறேன். வழி தவறிய போராட்டம், நன்மைக்குப் பதிலாக தீமையை உருவாக்கி விடும்.90 ஆயிரம் விதவைகள்

(11ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகைச் சுற்றியதில்

# மரதன் ஓட்டப் போட்டியில் குண்டுத் தாக்குதல்: மூவர் பலி, 100க்கும் மேற்பட்டோர் காயம்!

அமெரிக்காவின் பொஸ்டன் நகரில் கடந்த திங்கட்கிழமை நடந்த மரதன் போட்டியின்போது, நடந்த இரட்டை குண்டு வெடிப்பு சம்பவங்களில் மூன்று பேர் கொல்லப்பட்டதை அடுத்து , இந்த சம்பவம் குறித்த ஒரு பயங்கரவாதப் புலனாய்வு விசாரணைகளை அமெரிக்க மத்திய புலனாய்வு நிறுவனம் ( எப்.பி.ஐ) ஒருங்கிணைத்து நடத்துவதாகக் கூறியிரு க்கிறது.

இந்த சம்பவத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

சம்பவ இடத்தில் எஞ்சியிருக்கும் வெடி பொருட்களை புலனாய்வாளர்கள் பரிசோதித்து வருகின்றனர். இவை சிறியதாகவும், நுட்பமற்றவையாகவும் காணப்படுவதாக பிபிசியின் பாதுகாப்பு விவகாரங்களுக்கான செய்தியாளர் கூறுகிறார்.

போலிசார் பலரை விசாரித்துக் கொண்டிருப்பதாகவும் ஆனால் இதுவரை சந்தேக நபர்கள் எவரும் தடுத்து வைக்கப்படவில்லை என்றும் கூறுகிறார்கள்.

வாஷிங்டன், நியூயார்க் உட்பட பல அமெரிக்க நகரங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கிறாது.

மரதன் போட்டி முடியும் வெற்றிக் கோட்டுக்கு அருகே பார்வையாளர்கள் இருக்கும் பகுதிக்கு வெகு அருகே இந்த வெடிகுண்டு வெடிப்புகள் நடந்தன.

வெடிப்புகள் நடந்த சமயத்தில் நூற்றுக கணக்கான ஓட்டப்பந்தய வீரர்கள் , பார்வையாளர்களின் உற்சாக ஆரவாரங்களுக்கிடையே, ஓடிக்கொண்டிருந்தனர்.

வெடிகுண்டுகள் ஒரு சில விநாடிகளில் அடுத்தடுத்து வெடித்தபின்னர், அந்த இடத்தில் பெரும் புகை மண்டலம் எழுந்ததை தொலைக்காட்சிப் படங்கள் காட்டின.

பெருங்குழப்பத்துக்கடையே, ஓட்டப பந்தய வீரர்கள் சிலர் இதையும் பொருட் படுத்தாது, ஓடி முடிப்பதையும், பல காயமடைந்த பார்வையாளர்கள் சக்கர நாற்காலிகளில் ரத்தக் காயங்களுடன் கொண்டுசெல்லப்படுவதையும், அவசர சேவைப் பணியாளர்கள் வேலிகளை உடைத்துக்கொண்டு காயமடைந்தவர்களை அணுக முயல்வதையும் படங்கள் காட்டின.

இந்தச் சம்பவம் தொடர்பாக அமெரிக்க அதிபர் ஒபாமா கருத்து தெரிவிக்கையில் பொஸ்டன் தாக்குதலை யார் நடத்தினார்கள் , எதற்காக அதைச் செய்தார்கள் என்பது குறித்து அதிகாரிகளுக்கு இன்னும் தெரியவில்லை ஆனால் குண்டுத் தாக்குதலுக்கு யார் பொறுப்பானவர்களாக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றார்.

இந்த சம்பவத்துக்கு தாங்கள் பொறுப்பில்லை என்று பாகிஸ்தான் தாலிபான் மறுத்திருக்கிறது.

இதேவேளை அமெரிக்காவில் பொஸ்டன் மரதன் போட்டியின்போது நடந்த குண்டுத்தாக்குதல் தொடர்பில் அமெரிக்க காவல்துறையினர் சந்தேகநபர் ஒருவரை இலக்குவைத்து தேடுதல் வேட்டையில் இறங்கியுள்ளனர்.

முக்கிய பல்கலைக்கழகம் ஒன்றில் போலிஸ் அதிகாரி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து காவல் துறையினர் பெரும் தேடுதல் நடவடிக்கையை தொடங்கியுள்ளனர்.

பொஸ்டனிலிருந்து 10 கிலோமீட்டர் தொலைவில் வாட்டர்டவுன் என்ற இடத்தில் காரொன்றை விரட்டிச் சென்று தாக்குதல் நடத்தியதில் சந்தேகநபர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பொஸ்டன் மரதன் குண்டுவெடிப்பு தொடர்பில் வெளியாகியுள்ள படங்களில், வெள்ளைநிற பேஸ்பால் தொப்பியொன்றை



அணிந்தவாறு காணப்படும் சந்தேகநபர் தப்பிச்சென்றுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை மாலை, மஸாசூசெட்ஸ் தொழிநுட்பப் பல்கலைக்கழகத்தில் போலிஸ் அதிகாரி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துடன் இரண்டு சந்தேகநபர்கள் தொடர்பட்டிருந்தாக காவல்துறை கூறுகிறது.

பொஸ்டன் மரதன் போட்டி மீது குண்டுத் தாக்குதல் நடத்தியதாக சந்தேகிக்கப்படும் நபரை அமெரிக்க காவல்துறையினர் சுட்டுக் கொலை செய்துள்ளதுடன் மற்றுமொரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.


குண்டுத் தாக்குதல் தேடுதல் நடவடிக்கையின்போது சந்தேகநபர்கள் இருவரில் ஒருவர் பொலிஸாரினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். 19 வயதான தாஸாகூர் திஸ்னவேர் என்பவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

சந்தேகநபர்கள் துப்பாக்கிமுனையில், காரொன்றை உரிமையாளருடன் சேர்த்து கடத்திச் சென்றிருந்தனர்.

பின்னர், அவர்கள் கார் உரிமையாளரை விடுவித்துவிட்டு தப்பிச் சென்றனர்.

வாட்டர்டவுன் என்ற இடத்தில் காரை நிறுத்துவதற்கு முன்னதாக அவர்கள் போலிசாருடன் துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டதுடன், கைக்குண்டுகளையும் வீசி தாக்குதல் நடத்தியிருந்தனர்.

# கொல்லப்பட்ட சிறுவனால் வரையப்பட்ட கருத்தமைவான ஓவியம்!




பொஸ்டன் மரதன் பந்தயத்தின் இறுதியில் நிகழ்ந்த குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட எட்டுவயது சிறுவன் மார்டின் ரிச்சர்ட், உலக அமைதியை வலியுறுத்தும் வண்ணம் வரைந்திருந்த ஒரு படமும், வாசகமும் தற்போது இணையதளத்தில் வலம் வருகின்றது. Lucia Brawley என்பவர் முகநூலில் (Facebook)பதிவு செய்துள்ள இந்தப் படத்தைக் கண்டு பலரும் தங்கள் அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், குழந்தைகளிடமிருந்து அமைதிப் பாடங்களை நாம் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதையும் இணையதளத்தில் பதிவு செய்து வருகின்றனர் என்று வாஷிங்டன் போஸ்ட் தெரிவிக்கிறது.

சென்ற ஆண்டு தன் முதல் நன்மையைப் பெற்ற மார்ட்டின், பள்ளியில் வரைந்திருந்த ஒரு படத்தில், 'மக்களை இனி ஒருபோதும் காயப்படுத்தவேண்டாம், அமைதி' என்ற வார்த்தைகளை வரைந்திருந்தான்.மரதன் போட்டியில் கலந்துகொண்ட Bill Richard பந்தயத்தை முடிப்பதைக் காண அங்கிருந்த அவரது மனைவி, மகள், மற்றும் மகன் மார்டின் ஆகியோரில், மார்டின் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டான். அவனது தாயும், சகோதரியும் இன்னும் ஆபத்தான நிலையில் மருத்துவ மனையில் உள்ளனர்.

# மீண்டு வரும் உலக பொருளாதாரம்: சர்வதேச நாணய நிதிய அறிக்கை

உலக பொருளாதாரம் மீண்டு வருவதாக சர்வதேச நாணய நிதியம் கூறியுள்ளது.

இந்த வருட பிற்பகுதியில் ஒரு வளர்ச்சியைக் காணும் உலக பொருளாதாரம் 2014 இல் 4 வீதத்தை எட்டும் என்று உலக பொருளாதர நிலைமை குறித்த தனது புதிய அறிக்கையில் அது எதிர்வு கூறியுள்ளது.

பொருளாதார ரீதியில் உலகம் எதிர்கொண்ட இரு பெரும் ஆபத்துக்கள் வெற்றிகரமாக செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளதாக நாணய நிதியம் கூறியுள்ளது. ஐரோப்பிய வலயம் உடைந்துபோவதற்கான ஆபத்து மற்றும் அமெரிக்காவில் அரசாங்க செலவினத்தில் திடீர் வெட்டு குறித்த ஆபத்து ஆகியன தணிக்கப்பட்டுவிட்டன என்றும் இருந்த போதிலும், ஐரோப்பாவும், அமெரிக்காவும் இன்னமும் ஆபத்தை எதிர்கொள்ளக்கூடிய நிலையிலேயே இருக்கின்றன என்றும் சர்வதேச நாணய நிதியம் கூறியுள்ளது.சைப்பிரஸில் ஏற்பட்ட நெருக்கடிகள் மற்றும் காபந்து அரசாங்கத்தால் நிர்வகிக்கப்படும் இத்தாலியின் அரசியல் நிலைமைகள் ஆகியவற்றில் காணப்படும் ஸ்திரமின்மை குறித்து அது சுட்டிக் காட்டியுள்ளது.அமெரிக்காவில் செலவு வெட்டு காரணமாக பொருளாதாரம் பின்னடைவதற்கான வாய்ப்பு இன்னமும் இருக்கிறது. நீண்ட கால அடிப்படையில் அரசாங்கம் வாங்கக் கூடிய கடன்களை குறைப்பதற்கான திட்டமும் இன்னமும் அங்கு அவசியமாகிறது. வளர்ந்துவரும் பொருளாதாரங்களுக்கு நிறைய சவால்கள் இருந்தாலும், அவற்றுக்கு பிரகாசமான வாய்ப்பு இருப்பதாகவே இந்த அறிக்கை கூறுகிறது.இந்தியா, ஹங்கேரி மற்றும் எகிப்து போன்ற நாடுகளை பொறுத்தவரை அதிகரித்து வருகின்ற அரசாங்க செலவுகள் அவற்றுக்கு ஆபத்தாக இருப்பதாகவும், அவை நிதிநிலைமையை பலப்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் நாணயநிதியம் தெரிவித்துள்ளது.

# குழந்தைகளின் வாழ்வைக் காப்பாற்ற ஐ.நா. திடசங்கற்பம்!

விலைமலிவான மருந்துகளைப் பயன்படுத்துதல், குழந்தை பிறப்புக்குப் பின்னர் தாய்ப்பால் கொடுப்பதை ஊக்குவித்தல் போன்ற நடவடிக்கைகளை ஊக்குவிப்பதன் மூலம் ஒவ்வோர் ஆண்டும் இலட்சக்கணக்கான குழந்தைகளின் வாழ்வைக் காப்பாற்ற முடியும் என்று ஐக்கிய நாடுகள் நிறுவனம் அறிவித்துள்ளது.

புதிதாகப் பிறந்த குழந்தைகளின் நலவாழ்வு குறித்து உலகில் முதன்முறையாக இடம்பெறும் கருத்தரங்குக்குச் செய்தி அனுப்பியுள்ள ஐ.நா.பொதுச்செயலர் பான் கி மூன், பிறந்தவுடன் இறக்கும் குழந்தைகளின் வாழ்வைக் காப்பாற்றுவதற்கு இதில் கலந்து கொள்ளும் நாடுகளின் பிரதிநிதிகள் நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துள்ளார். தென்னாப்ரிக்காவின் ஜொகானஸ்பேர்க் நகரில் தொடங்கியுள்ள 4 நாள் கருத்தரங்கில், நலவாழ்வு அதிகாரிகள், அரசுகளின் பிரதிநிதிகள் என நூற்றுக்கணக்கானவர்கள் 50 நாடுகளிலிருந்து கலந்து கொண்டனர்.தடுத்து நிறுத்தக்கூடிய மற்றும் சிகிச்சைகளால் காப்பாற்றப்படக்கூடிய நோய்களால் ஒவ்வோர் ஆண்டும் 30 இலட்சம் குழந்தைகள் பிறந்த மூன்று மாதங்களுக்குள் இறக்கின்றன என்று ஐ.நா.நிறுவனங்கள் கூறுகின்றன. ஐ.நா.பொதுச்செயலரின் செய்தியை, ஐ.நா.வின் தென்னாப்ரிக்க ஒருங்கிணைப்பாளர் Agostinho Zacarias வாசித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனர்வாழ்வு பெற்றுவரும்

## 400 முன்னாள் போராளிகள் சுற்றுலா!

### கூட்டமைப்பின் .(1ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் உரையாற்ற வுள்ளார்.

முன்னதாக மாவை சேனாதிராசா, சி.வி.கே.சிவஞானம், பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் ஆகியோர், வடக்கு மாகாணசபைத் தேர்தலில் முதல்வர் வேட்பாளராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நிறுத்தப்படலாம் என்று ஊகங்கள் வெளியானது குறிப்பிடத்தக்கது. தற்போது கொழும்பில் வாழ்ந்துவரும் விக்கினேஸ்வரன் போட்டியிட வுள்ளதாக கூறப்படுகின்றது. கொழும்பில் சகல மட்டத் திலும் நெருக்கமான உறவைக்கொண்டவரான விக்கினே ஸ்வரன் தெரிவுசெய்யப்பட்டிருப்பது பல்வேறு சந்தேகங் களை தோற்றுவித்திருப்பதாக தமிழரசுக்கட்சிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

### தமிழக.........(1ம் பக்கத் தொடர்ச்சி)

மிக நெருக்கமான தொடர்புகளை எதிர்பார்க்கின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

2014 ஆம் ஆண்டு நடைபெறும் பொதுத் தேர்தலில் தமிழகத்தில் உள்ள தமது கூட்டணி கட்சிகளை தம்முடன் வைத்து கொள்வதற்காகவே இந்தியா இலங்கைக்கு எதிராக, மனித உரிமை பேரவையில் வாக்களித்தது.

சிங்கள - தமிழ் மக்கள் இடையில் ஒருவருக்கு ஒருவர் கௌரவத்தை ஏற்படுத்தி கொடுப்பதன் மூலமே இலங்கையின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வை பெற்றுக்கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

### போராட்டமும்....... (7ம் பக்கத் தொடர்ச்சி)

இப்படி ஏதோ ஓர் ஏழைக் குடும்பத்தை மது வெட்டி சாய்க்கும் கதை காதில் விழுந்துகொண்டே இருக்கிறது. முப்பது வருடங்களில் கடும் ஏழ்மையிலிருந்து மேலே எழுந்து வந்த குடும்பங்களையும் எனக்குத்தெரியும். அடுத்த தலை முறையில் படிப்பை ஆயுதமாகக் கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக நிமிர்ந்தவர்கள் அவர்கள்.

அந்த வாய்ப்பை ஒவ்வொரு ஏழைக் குடும்பமும் தன் அடுத்த தலைமுறையில் பெற்றுவிடமுடியும் என்ற கனவில் இருக்கிறது. அப்படித்தான் இந்த மூவரும் தங்கள் குழந்தைகளை இப்போது படிக்க வைக்க சிரமங்களை மீறி முயற்சிக்கிறார்கள். இந்தக் குழந்தைகள் மதுவில் சிக்கினா லோஅல்லது கணவர்கள் மது அடிமைகளாக அமைந்தாலோ இன் னொரு தலைமுறையும் படுகுழியில். முன் தலைமுறையின் ஏழ்மையிலிருந்து அடுத்த தலைமுறை விடுபடும் வாய்ப்பை இன்று மிகப் பெரும் அளவில் குலைத்துக் கொண்டிருக்கும் காரணங்களில் தலை யாயது மதுதான்.

மதுவைப் பக்குவமாகக் குடிக்கப் பழகவேண்டும் என்று சொல்லும் அறிவு ஜீவிகள் தயவுசெய்து அப்படிப்பட்ட பக்குவமான சமூகங்களுக்கு புலம் பெயர்ந்து போய்விடும்படி கேட்டுக் கொள்கிறேன். இங்கே இப்போது அது சாத்தியமே இல்லை. மதுவிலக்கை கொண்டு வந்தால் கள்ளச் சாராயத்தில் பலரும் சாவார்கள் என்று வாதாடும் அரசு அதிகாரிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் சொல்வேன்: இப் போது இரண்டு கோடி பேர் தினமும் குடிக கிறார்கள். இதில் கள்ளச் சாராயத்தைக் குடித்து இருபது லட்சம் பேர் சாகும் வாய்ப்பு உண்டா? இல்லை. அப்படியே இருபது லட்சம் செத்தாலும், மீதி ஒரு கோடி எண்பது லட்சம் பேர் குடியிலிருந்து மீளமாட்டார்களா? மதுவிலக்கு இருந்த முப்பது ஆண்டுகளில் கூட இங்கே முப்பதாயிரம் பேர் செத்த வரலாறு இல்லை. ஆனால் ஆண்டு தோறும் குடித்துவிட்டு வண்டி ஓட்டுவோரால் குடிக்காதவர்கள் உட்பட பத்தாயிரம் பேர் சாகிறார்கள்.

மாணவர்கள் படிக்கிற காலத்தில் போராடுவது, படித்து முடித்தபின் போராடுவது எதுவானாலும் சரி, சுயசிந்தனையும் தெளிவும் இருந்தால்தான் இரண்டும் சாத்தியம். இரண்டையும் அழிக்கும் மது மாணவர்கள் மத்தியில் பெருகிக் கொண்டிருக்கிறது. போராட்ட ங்களில் பங்கு பெறும் மாணவர் எண்ணி க்கையை விட, மது குடிக்கும் மாணவர் எண்ணிக்கைதான் அதிகம் என்பது கசப்பான உண்மை.

அரசியல் கட்சிகளும் அதற்கு அப்பாற் பட்டவர்களும் சேர்ந்து மதுவை ஒழிக்கா விட்டால், தமிழகத்து தமிழன் வருங் காலத்தில் தனக்காகவும் போராட மாட்டான் மற்றவருக்காகவும் போராட மாட்டான். ராஜபக்ஷேவை விட கத்தியின்றி ரத்தமின்றித் தமிழர்களைக் கொன்ற பெரிய கொலைகாரர்கள் கருணாநிதியும் ஜெயலலிதாவும்தான் என்று நாளைய வரலாறு குறிக்கப் போவதைத் தடுக்க விரும்பினால், இருவரையும் கேட்டுக் கொள்வேன். தயவு செய்து நீங்கள் ஏற்படுத்திய இழிவை உங்கள் காலத்திலேயே நீக்குங்கள்.

நன்றி - கல்கி

---

புனர்வாழ்வு பெற்றுவரும் சுமார் 400 முன்னாள் போரா ளிகளான இளைஞர் யுவதிகள் தென்பகுதிக்கு சுற்றுலா ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

எதிர்வரும் 26ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை மூன்று நாட்கள் கொழும்பு மற்றும் தென்பகுதியில் தங்கியிரு க்கவுள்ள அவர்கள் பல்வேறு முக்கிய இடங்களுக்கும் விஜயம் செய்யவுள்ளதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச் சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பின் முக்கிய பிரதேசங்கள், காலி, மாத்தறை, தெனியாய, கதிர்காமம் பகுதிகளுக்கும், மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திற்கும் இவர்கள் விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேசங்களில் நடைபெறவுள்ள கலை, கலாசார, விளையாட்டு பல்வேறு நிகழ்ச்சிகளில் இவர்கள் கலந்து கொள்ளவுள்ளதுடன் இந்தப் பிரதேசங்களில் வாழும் சிங்கள, தமிழ், மற்றும் முஸ்லிம் மக்களின் கலாசார, பாரம்பரிய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவுள்ளனர்.

### ஆஸி.படகு..(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.

அவுஸ்திரேலியாவிற்கு செல்வது தொடர்பில் மேற்கொள்ளப்படும் போலிப் பிரச்சாரங்களுக்கோ அல்லது ஆசை வார்த்தைகளுக்கோ ஏமாற்றமடையக் கூடாது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### பிரிட்டன்....(12ம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தொடர்ந்து இது குறித்து அந்நாட்டு அதிகாரிகளுக்கு உயர்ஸ்தானிகராலயம் முறைப்பாடு செய்தது. லண்டனின் புறநகர்ப் பகுதியான மிட்சாமில் இந்த புலிக்கொடி பறக்க விடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏனைய உலக நாடுகளின் கொடிகளுடன் இந்தக் கொடியும் பறக்கவிடப்பட்டிருந்தது. தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பு ஒன்றின் கொடியே இவ்வாறு பறக்கவிடப்பட்டுள்ளதாக இலங்கை உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் குறித்த தீம் பார்க் நிர்வாகத்தினருக்கு தெளிவுபடுத்தியதாகவும், இதன் பின்னர் இந்தக்கொடி அகற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### இலங்கையில் துக்ளக்......... (1ம் பக்கத் தொடர்ச்சி)

இங்கு இருக்கிறார்கள். எங்கள் ஒரு இயக்கத்தில் மட்டும்,சொத்துக்களை இழந்த 2244 குடும்பங்கள் உறுப்பினர்களாகி இருக்கிறார்கள்.ஈழம் என்பது இனி கனவிலும் சாத்திய மில்லாத விஷயம். அதற்குப் பதிலாக, விதவைகள் தங்கள் குழந்தைகளை வளர்த்தெடுக்க மறுவாழ்வுத் திட்டம், வீடுகளை இழந்தவர்களுக்கு மீண்டும் வீடுகள், நிலத்தை இழந்தவர்களுக்கு மீண்டும் அதே நிலம், தொழிலை இழந்தவர்களுக்கு இழப்பீடுகள் என்பதுதான் எங்களது இன்றையத் தேவை. தொலைத்த இடத்தில் தேடினால் தான் இழந்த பொருள் கிடைக்கும். 'ராஜபக்ஷ அரசின் செயல்களுக்கு அந்த அரசிடம்தான் இழப்பீடு பெற முடியும். அவருக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்து, சிறையில் அடைப்பது முக்கியமல்ல. எங்கள் வாழ்வு எங்களுக்குத் திரும்பக் கிடைக்க வேண்டுமென்பதுதான் அதை விட முக்கியம்.இவரிடம் போராடினால்தான் ஓரளவாவது இழப்பீடு பெற முடியும். 18 கட்சி கொண்ட கூட்டணி ஆட்சி இது. பல கட்சிகளின் மூலம் அவருக்கு நெருக்கடி கொடுக்க முடியும். பல தமிழ் கட்சிகளும் அதில் உள்ளன. அவர்களும் அதற்கு நெருக்கடி கொடுக்க முடியும். அடுத்த ஆட்சி வந்து விட்டால் 'அது அவர்கள் பாடு உங்கள் பாடு' என்று கைகழுவி விடக்கூடும். எனவே, முடிந்தளவு இந்த அரசிடமே பேசி, எங்கள் வாழ்க்கையைத் திரும்பப் பெறுவதுதான் சிறந்த ராஜதந்திரமாக இருக்க முடியும். அதற்கு உங்கள் போராட்டங்கள் துணை நிற்க வேண்டுமே தவிர, தடைக் கற்களாகி விடக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.'



**ஆர். யோகராஜன் (ஐக்கிய தேசியக் கட்சி, பிரதான எதிர்க் கட்சி எம்.பி.)**

"எழுபதுகளில் அஹிம்சா முறையில் தோன்றிய தனித் தமிழீழக் கோரிக்கை, 80-களில் ஆயுதம் ஏந்தத் துவங்கியது. ஆனால், தொடர்ந்து போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில், அந்தக் கோரிக்கை படிப்படியாகக் கைவிட ப்பட்டு விட்டது. புலிகள் மட்டுமே அதை விரும்பி னார்கள். மக்கள் அரசியல் தீர்வை நோக்கி நகரத் துவங்கி விட்டனர். தமிழர்களுக்கு உரிய அரசியல் தீர்வு தருவது குறித்து சிங்கள மக்களிடையே நடத்தப்பட்ட சர்வேயில், 82 சதவிகித சிங்கள மக்கள் தமிழருக்கு ஆதரவாகவே கருத்து தெரிவித்திருந்தனர். சிங்கள அரசாங்கம் அரசியலுக்காகச் செயல்படலாம். ஆனால், சிங்கள மக்கள் அப்படியில்லை. 'தமிழகத்திற்கு வரும் சிங்களவர்களை அங்குள்ளவர்கள் தாக்குவது மிக மிகத் தவறானது. புத்தபிட்சுகள் கடுமை யாகத் தாக்கப்பட்ட ஃபோட்டோ, வீடியோக்கள் வெளி யான பிறகும் கூட இங்குள்ள தமிழர்கள் மீது எந்தத் தாக்கு தலும் நடக்கவில்லை என்பது, இங்கு நிலவும் அமைதிக்கு ஒரு பெரிய உதாரணம். இதன் பிறகாவது அது போன்ற செயல்கள் அங்கு நடைபெறாமல் இருக்க வேண்டும். அங்குள்ள இசை அமைப்பாளர்கள், பாடகர்கள், சினிமா நட்சத்திரங்கள் இலங்கை வந்தால் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறீர்கள். அவர்களுக்கு 'தமிழ்த் துரோகி' என்று முத்திரை குத்துகிறீர்கள். இது என்ன நியாயம்? அவர்கள் இங்கு வந்து மகிழ்விக்கப் போவது யாரை? இங்குள்ள தமிழர்களைத்தானே? இங்குள்ள தமிழன் தமிழ் இசை கேட்கக் கூடாதா? அந்த இசையமைப்பாளர்களை, பாடகர் களை நேரில் பார்த்து மகிழக் கூடாதா? கிரிக்கெட், தடகளம்... என்று விளையாட்டுகளில் கூட இதையெ ல்லாம் கொண்டு வந்தது மிகத் தவறு.'



**டக்ளஸ் தேவானந்தா (இலங்கை அமைச்சர்) :**

'உணர்வுகளால் மட்டும் சிந்திக்காமல், நடைமுறை சாத்தியங்களையும் மனதில் நிறுத்தி தமிழக மாணவர்கள் சிந்திக்க வேண்டும். பெரும்பாலும் தமிழர்கள் மட்டுமே உள்ள இடத்திற்கு வருகை தரும் சிங்கள வரையும், புத்த பிட்சுகளையும் தாக்குவதென்பது சரி என்றால், 72 சதவிகித சிங்களவர்களைக் கொண்ட மண்ணில் தமிழன் தாக்கப் பட்டதும், தாக்கப்படுவதும் நியாயம்தான் என்றாகி விடும். அதற்குத் தயவு செய்து இடம் கொடாதீர்கள்.

**கண்டி மலைவாழ் தமிழர்கள் :**

இங்கு நாங்களும் சிங்களரும் சேர்ந்து வாழ்கிறோம். தமிழ கத்தில் சிங்களர்கள் மற்றும் புத்த பிட்சுகள் தாக்கப்ப ட்டார்கள்; இலங்கை அலுவலகங்கள் மீது தாக்குதல் என்றெல்லாம் செய்திகள் வந்தால், அன்றைக்கு நாங்கள் வெளியே செல்லாமல் பயந்து, பயந்து வீட்டிற்குள்தான் இருப்போம். உங்கள் செயல்களால் எங்களது வாழ்வு பாதிக்கப்படக் கூடாதல்லவா ? எனவே, இது போன்ற தாக்குதல்களைக் கைவிடுங்கள். எங்களின் அபிவிருத்திக்கும், அரசியல் தீர்வுக்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் சிந்திக்க வேண்டு கிறோம்.'

**பெயர் வெளியிட விரும்பாத சிங்களர் (தமிழிலேயே பேசினார்)**

' இந்தியாவில் தமிழ்நாட்டைத் தனி நாடாக்கப் போரா டாமல், இலங்கையில் பிரிவினை கேட்டு அங்கு போரா டுவது ஆச்சரியமாக இருக்கிறது. பாகிஸ்தானில் மாண வர்கள் எல்லாம் சேர்ந்து கடுமையான போராட்டம் நடத்தினால், நீங்கள் காஷ்மீரைத் தனி நாடாக அறிவித்து விட முடியுமா? அதுதான் இங்குள்ள நிலைமையும். ஏற்கெனவே சிறிய நாடு இது. இங்கு இன்னும் பிரிவுகள் வந்து என்ன பயன்? யாழ்ப்பாணத் தமிழருக்குத் தனிநாடு கொடுத்தால், அதில் இந்திய வம்சாவளி தமிழர்களையும், மலையகத் தமிழர்களையும் சேர்த்துக் கொள்ள மாட டார்கள். பிறகு அவர்களுக்கு ஒரு நாடு தர வேண்டும். அதைய டுத்து சுமார் 14 சதவிகிதம் தமிழ் பேசும் முஸ்லிம்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு தனிநாடு கொடுக்க வேண்டும். சிங்களவர்களில் கிறிஸ்தவர்கள் கணிச மாக இருக்கிறார்கள். அவர்கள் கேட்டால் அவர்களுக்கும் ஒரு நாடு கொடுக்க வேண்டும். சாத்தியமா இதெல்லாம்?

(தொடரும்)

நன்றி -துக்ளக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இலங்கையின் வளர்ச்சி: ஆசிய வங்கி பாராட்டு!

ஆசிய அபிவிருத்தி வங்கியின் வருடாந்த பொருளாதார நிலைப்பாடு பற்றிய ஆசிய அபிவிருத்தி அவுட்லுக் 2013 சஞ்சிகை இலங்கையின் பொருளாதாரம் இவ்வாண்டில் 6.8சதவீதமாகவும் 2014ல் 7.2 சதவீதமாகவும் வளர்ச்சியடையும் என்ற தகவலை வெளியிட்டுள்ளது.2012ல் கைத்தொழில்துறை இரண்டு மடங்கு வளர்ச்சியடைந்து 10.3 சதவீதமாக உயர்ந்திருந்தது. அதைவிட நிர்மாணத்துறையின் வளர்ச்சி சிறப்பாக அமைந்திருந்தது. இலங்கையில் வறட்சி காரணமாக விவசாயத்துறை மந்த நிலையில் இருந்த போதிலும், இவ்விதம் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டிருப்பது பாராட்டக்கூடிய விடயமென்றும் அந்த சஞ்சிகை தெரிவித்துள்ளது.

### ஆஸி.பாதுகாப்பு பிரிவு விடுத்த எச்சரிக்கை----

# புகலிடக் கோரிக்கையாளர்கள் தேசியப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல்!

புகலிடக் கோரிக்கையாளர்கள் ஏன் தேசியப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக திகழ்கின்றனர் என்பதற்கு அவுஸ்திரேலிய பாதுகாப்புப் பிரிவான ஆசியோ விளக்கம் அளித்துள்ளது.
கால வரையறையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள சில புகலிடக் கோரிக்கையாளர்கள் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக திகழ்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
தாய் நாட்டில் குறித்த புகலிடக் கோரிக்கையாளர்கள் வன்முறைகள் ஈடுபட்டமைக்கான சாட்சியங்கள்




காணப்படுவதாகவும், மெல்பர்னில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சில இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்ந்தும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டு வருவதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
என்ன காரணத்திற்காக புகலிடக் கோரிக்கையாளர்கள் நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்ற கேள்விக்கு பதிலளிக்கும் வகையில் ஆசியோ, ஒவ்வொரு புகலிடக் கோரிக்கையாளர்களுக்கும் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது.
இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் வன்முறையின் மூலம் இலங்கையில் தனி இராச்சியமொன்றை அமைக்க முயற்சிப்பதாகக் ஆசியோவினால் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இலங்கை தமிழர் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வு!

### மணிசங்கர் ஐயர் கூறுகிறார்!!

இலங்கை தமிழர் பிரச்சினைக்கும் மீனவர் பிரச்சினைக்கும் பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காண முடியும் என காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் மணிசங்கர் ஐயர் தெரிவித்துள்ளார்.
பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையை தீர்க்க மத்திய அரசு அனைத்து நடவடிக் கைகளையும் எடுத்துள்ளதெனவும் பேச்சு வார்த்தை மூலமாக மாத்திரமே இப்பிரச் சினையை தீர்க்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
சில அரசியல் நோக்கங்களுக்காக தமிழக அரசு மத்திய அரசு மீது அபாண்டமான



குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவதாக அவர் குற்றம் சுமத்தினார்.
2014 தேர்தலுக்கு முன்னர் திராவிட முன்னேற்றக் கழகத்துடன் உள்ள முரண்பாடு முடிவுக்கு கொண்டுவரப்படும் எனவும் மணிசங்கர் ஐயர் தெரிவித்துள்ளார்.

## பிரிட்டன் பாக்கில் புலிக்கொடி: இலங்கைத் தூதுவர் புகார்!

பிரித்தானிய தீம் பார்க்கில் பறக்கவிடப்பட்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிக் கொடி அகற்றப்பட்டுள்ளது.இலங்கைப் பிரஜை ஒருவர் இது தொடர்பில் பிரித்தானியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகராலயத்திற்கு அறிவித்திருந்தார். (11ம் பக்கம் பார்க்க)

# மீன்பிடித்தடை காலத்தின் போது நல்லிணக்கம் ஏற்படுத்தப்படவேண்டும்!

கடந்த வாரம் திங்கட்கிழமையிலிருந்து அமுல்படுத்தப்பட்டுள்ள 45 நாட்கள் மீன்பிடித்தடை காலத்தின் போது இருநாட்டு கடற்றொழிலாளர்களுக்கும் இடையில் நல்லிணக்கம் ஏற்படுத்தப்படவேண்டுமென இராமேஷ்வர கடற்றொழிலாளர்கள் மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களை கேட்டுக்கொண்டுள்ளனர்.
கடல் மீன் வளத்தை பேணுவதற்காக மே மாதம் 29 ஆம் திகதி வரை மீன்பிடித்தடை அமுல்படுத்தப்படவுள்ளது. இந்த மீன்பிடித்தடை காலத்தின் போது தமது பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்படவேண்டும் அல்லது தமது வாழ்க்கைக்கு தேவையான வருமானத்தை ஈட்ட மாற்றுவழி வழங்கப்படவேண்டுமென தமிழ்நாட்டு கடற்றொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் பி.சேஸுராஜா கூறினார்.
இந்த தடைக்காலத்தின் போது 3000 இயந்திய படகுகள் நங்கூரமிடப்பட்டிருக்கும். இதன்போது 40000 கடற்றொழிலாளர்கள் குடும்பங்களுக்கு மாநில அரசாங்கம் மாதாந்தம் 2000 ரூபா உதவி வழங்கும்.
மீனவர்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைக்கு இலங்கை அரசாங்கத்துடன் பேசி ஒரு தீர்வை காணவேண்டும் இல்லாவிடின் மீனவர்களின் படகை அரசாங்கம் விலைக்கு வாங்க வேண்டுமென சேஸுராஜா கூறினார்.
அரசாங்கம் தமக்கு நியாயமான நட்டஈடு வழங்குமாயின் 300 மீனவர்கள் தமது படகுகளை விற்றுவிட்டு கடற்றொழிலை கைவிட தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.


பொதி அனுப்பும் சேவை CARGO SERVICE
உங்கள் நம்பிக்கையைப் பெற்ற
E.A.SHIPPING
9 BIS ROUTE NATIONALE 4 - 77320 BETON BAZOCHES
06 20 60 70 61
நிறை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது



கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, மட்டக்களப்பு, திருகோணமலை, இலங்கையின்
எப்பாகத்திற்கும் உங்கள் பொருட்களை நம்பிக்கையுடனும் பொறுப்புடனும் அனுப்பித் தருகிறோம்.
விமானச்சீட்டுக்களைப் பெறவும் பொதிகளை அனுப்பவும்
தொடர்புகளுக்கு : 06 20 60 70 61 ஜெகநாதன்
CEYLON SHIPPING LINES LTD
760, Dr.DANISTER DE SILVA MAWATHA - COLOMBO 09 - T.P:0112680301/0112680310


PRINTED BY MULTI LINES ADVERTISING (PVT) LTD 23.04.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org